விலை ரூபா 2-00 12 பக்கங்கள்

# ஈழநாடு

வார மலர் EELANADU VARAMALAR

மலர் 28 தை 5 ஐ. அவ். 17 இதழ் 338
யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை (18—1—87)

### புதியரக திரவத்தில்
## வல்வை இளைஞர் மோ. சைக்கிளை இயக்குகிறார்!

(வல்வெட்டித்துறை, சனி

வல்வை ஊறணியைச் சேர்ந்த பேக்கறி உரிமையாளரான இளைஞர் ஒருவர் தனது மோட்டார் சைக்கிளை புதியரக திரவத்தால் இயக்கிக்கொண்டிருக்கிறார்.

சீனி, ஈஸ்ற் (yeast), நீர் முதலியவற்றைக்கொண்டு வடிகட்டிப் பெறப்பட்ட திரவத்திலிருந்து சிறிதளவு பெற்றோல் கலந்து, தனது மோட்டார் சைக்கிளை அவர் இயங்க வைக்கிறார்.

இத்திரவம் தனது மோட்டார் சைக்கிளைப் பாதிக்கவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பெற்றோலில் இயங்குவது போன்று எஞ்சின் பாகங்கள் சரியாக வேலை செய்கின்றது என்றார்.

தனது கண்டுபிடிப்பைப் பற்றி புலிகளிடம் தெரிவித்த இவர், புலிகளால் கைப்பற்றப்படும் டலன் கணக்கிலான சுசிப்புகள் கூட இத்தேவைக்குப் பயன்படலாம் எனவும் கூறியுள்ளார்.

### ஆனையிறவில் புலிகள் சென்ரியை நோக்கி இராணுவம்

# 5 மணிநேர கடும் மோதலில்

# 8 சிப்பாய்கள் 6 புலிகள் பலி!

(நமது நிருபர்)

**ஆனையிறவிலுள்ள தமிழீழ விடுதலைப்புலிகளின் 'சென்ரியை' தாக்க முற்பட்ட இராணுவத்தினருக்கும் புலிகள் இயக்கப்போராளிகளுக்குமிடையே சுமார் 5 மணி நேரம் கடும்மோதல் இடம்பெற்றது. இதில் 8 இராணுவசிப்பாய்களும், 6 போராளிகளும் கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது:**

குறிஞ்சாத்தீவு காட்டுப்பகுதிக்கு ஹெலிகொப்டர்களில் வந்திறங்கி உச்சிப் நோக்கி கால்நடையாக சுமார் 75 சிப்பாய்கள் வந்துகொண்டிருந்தனர், ஆனையிறவு முகாமுக்கு சுமார் 300 யார் தூரத்தில் இருந்த புலிகளின் சென்றியை தாக்கும் வகையிலேயே அவர்கள் செயல்பட்டனர்.

இதனையடுத்து தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் மேற்கொண்ட பலத்த தாக்குதலில் இராணுவத்தினர் பின் வாங்கத் தொடங்கினர்.

இரு ஹெலிகொப்டர்களும் ஒரு சீ-பிளேனும் தரைப் (11ம் பக்கம் பார்க்க)

### வாழைச்சேனையில் பொலிஸார் மீது சூடு; இருவர் பலி!

யாழ்ப்பாணம் ஞாயிறு

வாழைச்சேனை பொலிஸ் நிலையத்திலிருந்து சந்தைப் பகுதியைநோக்கி விடுதலைப்புலிகள் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் பொலிஸ் தரப்பில் இருவர் கொல்லப்பட்டனர். சிலர் காயமடைந்தனர்.

நேற்றுமுன்தினம் இச்சம்பவம் இடம்பெற்றது

இச்சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது: நேற்றுமுன்தினம் காலை வாழைச்சேனை பொலிஸ் (11ம் பக்கம் பார்க்க)

### "வடக்கு நிலைமையை கையாள
## எரிபொருள் தடையே சிறந்த பரிகாரம் -லலித்

கொழும்பு, சனி

"வடபகுதியில் இராணுவ நடவடிக்கையை தீவிரப்படுத்துவதைவிட எரிபொருள் தடை தீவிரப்படுத்துவதே அங்குள்ள நிலைமையைக் கையாள சிறந்த பரிகாரமாகுமென நாம் நம்புகிறோம்,"

இவ்வாறு தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு அத்துலத்முதலி கொழும்பில் நேற்று நடைபெற்ற கூட்டமொன்றில் தெரிவித்தார்

வடபகுதியில் சிவில் நிர்வாகத்தை நடைமுறைப்படுத்தும் தமது திட்டங்களை தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் நடைமுறைப்படுத்தி வருகின்றனர்

விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் தமது சிவில் நிர்வாக நடைமுறைகளை கைவிட்டு அரசுடன் பேச்சுவார்த்தைக்கு வரும் பட்சத்திலேயே எரிபொருள் தடையை நீக்குவதுபற்றி ஆலோசிக்கப்படுமெனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

(11ம் பக்கம் பார்க்க)

### பவுஸர் குண்டுச்சம்பவம் 7 பேர் இதுவரை கைது

(கொழும்பு சனி

வெள்ளவத்தையில் பவுஸர் குண்டுவைப்பு முயற்சி சம்பந்தமாக இதுவரை மொத்தம் 7 பேர் சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்டதாக தெரியவருகிறது.

கைதுசெய்யப்பட்டவர்களில் ஒருவர் சவரிமுத்து சத்தியநாதன் என்றும் இவர் மட்டக்களப்பு லேக் வீதியைச் சேர்ந்தவர் என்று இவர் தையல் வேலைசெய்பவர் என்றும் விசாரணைகளின்மூலம் தெரியவந்துள்ளது

இவர் கைதானதையடுத்து மேலும் மூவர் கைதுசெய்யப் (11ம் பக்கம் பார்க்க)

### எரிபொருள் தடையை உடன் வாபஸ் பெறவும்
#### த. வி. கூ.

சென்னை, ஜன 17

"வடபகுதிக்கான எரிபொருள் தடையை இலங்கை அரசு உடன் வாபஸ்பெற வேண்டும்"

இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணியின் அரசியற்குழு (பொலிற்பீரோ) இன்று சென்னையில் நடத்திய கூட்டத்தில் கோரிக்கை விடுத்துள்ளது

மேலும் இலங்கை இனப்பிரச்னையைத் தீர்க்கும் வகையில் செயல்பட்டுவரும் இந்தியாவின் நல்லெண்ண முயற்சிகள், இலங்கையின் இந்தப் (11ம் பக்கம் பார்க்க)

விசேட அறிவித்தல்

**இடமாற்றம்**

## லேடன் காமென்ஸ்

எமது ஸ்தாபனம் 19-1 87 தொடக்கம் 249, மின்சாரநிலைய வீதியில் தF)பினென்ஸ் கொம்பனி கீழ்கட்டிடத்திற்கு மாற்றப்பட்டுள்ளதென்பதை வாடிக்கையாளருக்கு அறியத்தருகின்றோம்.

புதிய முகவரி:

லேடன் காமென்ஸ்
249, மின்சாரநிலைய வீதி,
தF,பினென்ஸ் கொம்பனி கட்டிடம்,
(ஆஸ்பத்திரி பின்பக்கம)
யாழ்ப்பாணம்.

[C 7077]

### வவனியாவில் ஊர்காவல்படை முகாம்: 100 பேருக்கு பயிற்சி

(வவனியா நிருபர்)

வவனியாவில் ஊர்காவல் படைக்கென பயிற்சிமுகாம் ஒன்று அமைக்கப்பட்டு, சுமார் 100 பேருக்குஇராணுவத்தினர் பயிற்சி அளித்துவருவதாகத் தெரியவந்துள்ளது,

வவனியா-கண்டி வீதியில் பெத்தவிளாரைக்கு முன்னால் உள்ள அரசகாணியில் இப்பயிற்சிமுகாம் அமைந்துள்ளது

இக்காணி வவனியா தச்சன் குளப்பகுதியில் விமானப் படைத்தள விஸ்தரிப்புக்கென தனியாரிடமிருந்து அரசாங்கத்தினால் சுவீகரிக்கப்பட்ட விவசாயக்காணி என்பது குறிப்பிடத்தக்கது. (மா)

### புங்குடுதீவுக் கடலில்
## பல அடுக்குகள் கொண்ட புதியரக பீரங்கிப்படகுகள்

புங்குடுதீவு, சனி.

பீரங்கிகளுடன் பல அடுக்குகளைக்கொண்ட இரு புதியரககடற்படைக் கப்பல்கள் புங்குடுதீவு கடல் பகுதிகளில் வெளிப்பட ஆரம்பித்துள்ளன.

கரையிலிருந்து பார்க்கும்போது கருமை நிறமாகவும் இவற்றுடன் வேறு சிறியரக பீரங்கிக் கப்பல்களும் படகுகளும் நிற்பதை அவதானிக்க முடிகிறது.

சிறியரக பீரங்கிப் படகுகள் இரவில் நீண்ட நேரம் ரோந்து திரிவதை (11-ம் பக்கம் பார்க்க)

### பொதுத்தேர்தலைச் சந்திக்க தயாராகவும் —சிறிமா

கொழும்பு, சனி

1989ம் ஆண்டுக்கு முன்னர் பொதுத் தேர்தல் ஒன்றைச் சந்திக்கும் வகையில் தயாராகும்படி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சித்தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா தமது கட்சியினரைக் கேட்டுள்ளார்

(11-ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

மின்சார தையல் இயந்திரம், சோகேஸ், எலக்றிக் அயன், தொட்டில், ரீ வி. ஸ்ராண்ட் விற்பனைக்குண்டு. சனி, ஞாயிறில் தொடர்பு கொள்ளவும். 88/8 அரசடி வீதி, யாழ்ப்பாணம்.
[C-7014]

நல்லினப் பூக்கன்றுகளுடன் சாடிகள், FloorPolisher, விருந்தைக்கதிரைகள், ஒளிபரப்பு தனப்பெட்டிகள், Hi Fi Set, பிரம்பினாலான ஹோல்செற்றி, சாப்பாட்டு மேசை, கதிரைகள் கசற் றேடியோக்கள் இன்னும் பல விற்பனைக்குண்டு. பத்மநாதன், பிறீமசிரி சேவிஸ் திருநெல்வேலி வடக்கு.
[C-6907]

பிறதர் போட்டபிள் சிறிய ஆங்கில தட்டச்சு, அன்டவூட் பெரிய தட்டச்சு விற்பனைக்குண்டு. நிர்வாகி, சங்கர் பிறிலியன் அக்கடமி, மகாத்மா வீதி, நெல்லியடி, கரவெட்டி.
[C6913]

இம்மாதம் 25-ம் திகதி நடைபெறவிருக்கும் கணித, விஞ்ஞான ஆசிரியர் தெரிவுக்கான போட்டிப் பரீட்சைக்குரிய கைநூல் "பொது அறிவும் பொது உளச்சார்பும்" விலை 47/50 பூபாலசிங்கம், சிறீலங்கா புத்தகசாலைகளில் பெற்றுக்கொள்ளலாம். வெளியீடு: அஸ்ரன் இன்ஸ்ரிரியூட், 166/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
[A-3487]

கணித, விஞ்ஞான, ஆங்கில ஆசிரியர் தேர்வுக்கான நூல், Roy Senevirates கைநூல் To Selection of English Teachers Model Questions and Answers பொது அறிவு, பொது உளவுச்சார்பு நூல் விற்பனையாகின்றன மக்மிலன் புத்தகசாலை, 03, பஸ் நிலையம், யாழ்ப்பாணம்.
(C 6952)

எம்மிடம் பாடசாலை மாணவர்களுக்குத் தேவையான அப்பியாச, மொனிரர் கொப்பிகள், திருமண அழைப்பிதழ்கள் சகல விலைகளிலும் முத்திரைகள் விற்பனைக்குண்டு வியாபாரிகளுக்கு அதிக கமிஷன் வழங்கப்படும் மக்மிலன் புத்தகசாலை, 03, பஸ் நிலையம் யாழ்ப்பாணம்.
(C 6951)

வீட்டுத் தளபாடங்கள், கட்டில் மெத்தைகள், சாப்பாட்டுமேசைகள், குசினி கப்பட், கண்ணாடி மேசை, கண்ணாடி சோகேஸ், புத்தக அல்மாரி, சிங்கர் தையல் மெஷின், கசற் றேடியோக்கள், நாஷனல் கறுப்பு 12'' டி வி. டெக், 4 பேர்ணர் எலக்ரிக் குக்கர், பாண்ரோஸ்டர் கிற்றூர், ஷேவிங் மெசின், சிங்கர் எலக்ரிக் மெஷின், பிளாஸ்ரிக் படகு, மற்றும் பல உடன் விற்பனைக்கு. M. தியாகராஜன், 326, பிரதான வீதி யாழ்ப்பாணம். சென்.பற்றிக் சந்தியருகில்.
(C 6982

Golden Comet Cockrels சிவப்பு சேவற்குஞ்சுகள் 18-01-1987 ல் விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவு செய்க: Nallur Farm Centre (நல்லூர் விடியோ சென்ரர்) 19, முருகேசர் லேன், நல்லூர்
(C 6981)

Christombu Farm Golden Comet ஒருநாள் சேவற்குஞ்சுகள் 21-ந் திகதி புதன்கிழமை விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவு செய்க. சற்குணராஜா பிறதர்ஸ், பிரம்படி லேன், கொக்குவில்
(C 6975)

## விற்பனைக்கு

கணித, விஞ்ஞான ஆசிரிய தெரிவிற்கென விசேடமாக இவ்வாரம் பிரசுரிக்கப்பட்ட பொது அறிவு வினாவிடை 1986ன் உலக, இலங்கை விவகாரங்களை பிரதான அம்சமாகக் கொண்டது. பரீட்சைக்குரிய வழிகாட்டி. விலை ரூபா 8/- யாழ்ப்பாணம் நிருபா புத்தகசாலையிலும் ஏனைய புத்தக நிலையங்களிலும் கிடைக்கப்பெறும்.
C 7023

36 அங்குல பேப்பர் கட்டர் Paper Cutter தரமானது விற்பனைக்கு உண்டு கந்தையா ஆனந்தன், சூடுலந்தான், தெல்லிப்பழை.
[C-7010]

Honda ஜெனரேற்றர் புதியது மண்ணெண்ணெயில் இயங்கக் கூடியது. எலெக்றிக் Train Set மவுலினெக்ஸ் மிக்சர் Electric Room Heater விற்பனைக்குண்டு தொடர்பு: நந்தகுமார், 32/3 விதானையார் வீதி, சுண்டுக்குளி
C 7006

சித்தங்கேணியில் நீர், மின் வசதிகளுடன் கூடிய மூன்றரைப் பரப்பு வீடுவளவு விற்பனைக்குண்டு. தொடர்பு: த சச்சிதானந்தன், மே/பா திருமதி இ அப்புத்துரை டச்றோட், பன்னமுலை, சித்தங்கேணி.
[C 7009]

ராமநாதன் கல்லூரிக்கு அருகில், சபாபதி ஒழுங்கை (ரெட்டியால் அடி), உடுவில் கிழக்கு சுன்னாகத்தில் 2 பரப்புக்காணி விற்பனைக்குண்டு தொடர்பு கொள்ளவேண்டிய முகவர்: திருமதி கே கிருஷ்ணபிள்ளை, அச்சுக்கூட ஒழுங்கை, ஸ்ரேசன் வீதி, கொக்குவில்.
[A 3493]

கூடுதலான முட்டையிடும் இனமும் கலப்பினமுமான 200 இரண்டுவார நிறக் கோழிக்குஞ்சுகள் மலிவு விலையில் உடன் விற்பனவுக்கு-பிரித்தும் கொடுக்கலாம் சிக்கன்சைன், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
C 7024

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும், தொழில் நுட்பக்கல்லூரிக்கும் அருகாமையில் 2½ பரப்பு நிலம் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: S சிறிகாந்தன் பணியகாரன் ஒழுங்கை, வட்டு மேற்கு, வட்டுக்கோட்டை.
[C-7008]

## கல்வி

கொழும்பு றோயல் கல்லூரியில் கலைவிபயின்றவராகிய பாலர் முதல் வாலிபர், யுவதிகளுக்கும் தமிழ் Spoken English கற்றுத்தரப்படும் வீடுகளுக்கு சென்றும் கற்பித்துத் தரப்படும். விபரங்களுக்கு தபால் மூலமோ நேரிலோ தினமும் மாலை 4 மணிக்குப் பிறகும். ஞாயிறு நாட்களில் முழுநாளும் தொடர்பு கொள்க: டானியல். கே. சபாரத்தினம், 35/1, றக்கா லேன், யாழ்ப்பாணம்.
[C6944]

G. C. E (O L) இல் கட்டாய பாடமாகிய கணிதத்தினை புதிய பழைய கலைத்திட்டத்திற்கமைய 18 வருட அனுபவமுள்ள ஆசிரியரினால் ஆரம்ப அறிவிலிருந்து விஷேடசித்திக்கு நுணுக்கமான முறையில் குறைந்த காலத்தில் வீடுகளிற் சென்று கற்பிக்கப்படும் மற்றும் (O L), (A L) இற்குரிய ஆங்கில, விஞ்ஞான, கலை வர்த்தக பாடங்களை பயிற்றப்பட்ட பட்டதாரி ஆசிரியர்களினால் சிறப்புறக் கற்பிக்கப்படும். கடிதத் தொடர்பு செய்யவும். அல்லதுகாலை 8-00 – 9-00 இற்கிடையில் சந்திக்கவும். ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, கண்டுக்குளி.
(C6770)

## தேவை

சங்கீதம், நடனம், வயலின் வகுப்புகள் மாணிப்பாய் பகுதியில் நடாத்துவதற்கு அனுபவமுள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. அனுபவம் பற்றி சான்றிதழ்கள், தற்போதைய தொழில்கள், எதிர்பார்க்கும் வேதனம் ஆகிய முழு விபரங்களடங்கிய விண்ணப்பங்களை மூன்று நாட்களுக்குள் அனுப்பிவைக்கவும் விளம்பர இல C7013 மே/பா ஈழநாடு யாழ்ப்பாணம்.
(C 7013)

## வகுப்புக்கள்

108, Brown Road A/L 89 இரசாயனம்: ஆசிரியர் சத்தீஸ் ஆரம்பம்: 20- 1- 87 செவ்வாய் 6-30 a m நேரம்: செவ்வாய், வியாழன், வெள்ளி 6-15 a m. நேர அட்டவணை வசதியாகத்தரப்படும்
(C 6979)

தொலைக்காட்சி பழுதுபார்க்கும் பயிற்சி வகுப்புகள் செய்முறையுடன் ஆரம்பமாகவிருக்கிறது பயிற்சி காலம் 6மாதம் ஆரம்பம் 18-01-1987 தொடர்பு: எஸ் குணாளன், கிக்ஸ் கல்வி நிலையம், கண்டிவீதி, சாவகச்சேரி.
(C6960)

இரசாயனவியல் வகுப்புகள் ஆரம்பமாகவுள்ளன. ஆசிரியர் திரு பணியம் (ஆசிரியர் சென் ஜோன்ஸ் கல்லூரி) A/L87 பௌதீக இரசாயனம் ஆரம்பம்: 15-1-87 மாலை 4 மணி A/L 88 அசேதன இரசாயனம் ஆரம்பம் 15-1-87 மாலை 5 மணி யாழ் ஹோல் 95A பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
C 6970

கராட்டியில் பயிற்சி பெறுவதற்கு முன்னோடியாக தேவையான உடற்பலத்தைப் பெறுவதற்கும், நலிவுற்ற தேக அமைப்புடையவர்கள் பலசாலி (Body Builders ஆவதற்கும் சில விசேட புரத இலிப்பிட்டுகளின் உதவியுடன் யோகாசன ரீதியல் பயிற்சி அளிக்கப்படும் கடிதமூலமும் தொடர்பு கொள்ளலாம், தெய்வீகநாதன், மே/பா ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டுக்குளி
[C6985]

## தவறிவிட்டது

திருநெல்வேலி விவசாய பயிற்சி நிலையத்திற்கு அருகாமையில் மணி பேர்சுடன் எனது அடையாள அட்டை No:- 24 2801078V, திறப்பு மற்றும் முக்கிய அத்தாட்சிப் பத்திரங்களுடன் தவறிவிட்டது அதனைக் கண்டெடுத்தவர்கள் பின்வரும் விலாசத்திற்கு அனுப்பிவைக்கவும். சன்மானம் வழங்கப்படும் Dr K. இராசரத்தினம், டிஸ்பென்சரி ஒழுங்கை, உரும்பராய்
(C-7017)

யாழ்ப்பாணம்

# வை. எம். சி. ஏ. நடாத்தும் கூடைப்பந்தாட்டப் போட்டி

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் வை. எம் சி ஏ யாழ். மாவட்ட ரீதியில் விளையாட்டுக் கழகங்களிடையே, மாபெரும் கூடைப்பந்தாட்டப் போட்டியை நடாத்தவுள்ளது.

இப்போட்டி அடுத்த மாதம் 7ம் திகதி தொடக்கம் 14ம் திகதிவரை யாழ்ப்பாணம் சென். ஜேன்ஸ் கல்லூரி கூடைப் பந்தாட்டத்திடலில் நடைபெறவுள்ளது. இறுதி நாள் போட்டிகள் யாவும் 'மின்னொளி'யில் நடைபெறுமெனத் தெரியவருகின்றது.

இப்போட்டியில் கலந்து கொள்ள விரும்பும் விளையாட்டுக் கழகங்கள்யாவும் இம்மாதம் 24-ம் திகதிக்கு முன்பு யாழ் யாழ் வை. எம் சி ஏ. காரியதரிசி திரு. கணேசலிங்கத்துடன் தொடர்பு கொண்டு விபரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

யாழ். மாவட்டத்தில் தற்போது கூடைப்பந்தாட்டச் சாம்பியனுக்கதிசளும் யாழ்ப்பாணம் "கிறீன்பீல்ட்" விளையாட்டுக்கழகமும் மேற்படி போட்டியில் கலந்து கொள்ள விருப்பது குறிப்பிடத்தக்கது. (வி)

## தேவை

விரைவில் தொடங்கவிருக்கும் கல்வி நிலையத்திற்கு தமிழ் களால் இயன்ற பாடங்களைக் கற்பிக்கக் கூடிய ஆசிரியர்கள் தேவை. தராதரத்துடன் விண்ணப்பிக்கவும்! ஆறுமுகநாதன், 10 கச்சேரி கிழக்கு, ஒழுங்கை, சுண்டுக்குளி
(C 7021]

## மணப்பந்தல்

இந்து வேளாள குலத்தைச் சேர்ந்த U K பிரஜா உரிமையுள்ள மெக்கானிக்கல் என்ஜினியர் வயது 36 உதயத்தில் செவ்வாயுள்ள (சுவாதி நட்சத்திரம்) தற்போது விடுமுறையில் நிற்கும் மணமகனுக்கு பணமகள் தேவை ரெலிம்வாயிஸ் என்ஜினியஸ், 184 A) நாவலர் றோட், யாழ்ப்பாணம்.
[C 6997]

பச்சிலைப்பள்ளி இந்து உயர் வேளாள குடும்பத்தைச் சேர்ந்த 26 வயதுடைய மணமகளுக்கு பெற்றோர் வரன் தேடுகின்றனர் பயிற்றப்பட்ட ஆசிரியர், எழுதுவினைஞர் போன்ற தரத்தில் வேலையுள்ளவராக இருத்தல் சிறந்தது. ஜாதகத்துடன் மற்றும் குடும்ப விபரங்களுடன் விண்ணப்பிக்கவும், விளம்பர இல: C6922, மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம்.
[C6922]

கிறிஸ்தவ வேளாள குலத்தைச் சேர்ந்த 4 வயதுடைய விவாகரத்துச் செய்யப்பட்டவருக்கு அதே குலத்தைச் சேர்ந்த (35-45 வயதுக்குட்பட்ட) கணவனை இழந்தவரோ, விவாகரத்துச் செய்தவராயினும், விவாகமாகாதவராயினும் மணமகள் தேவை' முழு விபரத்துடனும் விண்ணபபிக்கவும் மணமகள் எச்சமயத்தவராயினும் சரி. மணமகன் தற்போது வியாபாரம் செய்வதுடன் மாதவருமானமாக ரூ 1500 பெறுகிறார். சீதனம் எதிர்பார்க்கப்படவில்லை. தொடர்பு: விளம்பர இல 6995, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம்.
[C6995]

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

# வடக்கு - கிழக்கு அரச அதிபர்கட்கு அழைப்பு

கொழும்பு, சனி.

வடக்கு, கிழக்குப் பகுதிகளிலுள்ள அரசாங்க அதிபர்களை பெப்ரவரி 6ம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ள விசேட மாநாட்டில் கலந்துகொள்ளுமாறு புனர்வாழ்வு அமைச்சு அழைப்பு விடுத்துள்ளது

இப்பகுதிகளில் பாதிக்கப்பட்ட அகதிகளை மீண்டும் அவர்களது சொந்த இடங்களில் குடியமர்த்துவது தொடர்பாகவே இவ்விசேட மாநாடு கூட்டப்படவுள்ளதாகவும் அவ்வமைச்சுத் தெரிவித்துள்ளது. (கு)

# ஹோம விரிவுரைகள்

யாழ்ப்பாணம். ஞாயிறு

இந்தியாவின் மகாராஷ்டிர மாநிலத்தைச் சேர்ந்த பேராசிரியர் 'மூலே'யின் ஹோமம் பற்றிய ஆய்வு வளக்கப் பிரசார விரிவுரை கடந்த வெள்ளிக்கிழமை மாலை திருநெல்வேலி இராமகிருஷ்ணாலயத்தில் நடைபெற்றது. இவரது விரிவுரைகள் இன்றுகாலை யாழ் திவ்ய ஜீவன சங்க மண்டபத்திலும் நாளை திங்கள் காலை கைதடி ஆயுர்வேதக்கல்லூரியிலும் பகல் 1 மணியளவில் கொக்குவில் இந்துக்கல்லூரியிலும் நிகழும் தகுந்த மொழிபெயர்ப்பாளரின் உதவியுடன் நடைபெறும். இவ்விரிவுரைகள் சாதாரணமானவரும் கேட்டுப் பயன்பெறத்தக்கதாயுள்ளது. (ப)

உ
சிவமயம்

# திருமணத் திருமுகம்

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான அக்ஷய வருடம் தைத்திங்கள் 8-ம் நாள் (21-01-1987) புதன்கிழமை பிற்பகல் 1-12மணி முதல் 3-36 வரையுள்ள சுபமுகூர்த்தத்தில்,

திருநிறை செல்வன்: **கனகசிங்கம் அரியகுணராசா**
[நீர்ப்பாசனத் திணைக்களம், வவனிக்குளம்.]

திருநிறை செல்வி: **நிர்மலாதேவி வல்லிபுரம்**
(பவளம்)

மங்கல நாண் பூணல்:
துர்க்காதேவி ஆலயம், துர்க்காபுரம், தெல்லிப்பழை.

திருமணம் நடைபெறவிருப்பதால், அன்றைய சுபநிகழ்ச்சியில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

திரு. திருமதி ச. கனகசிங்கம்,
வாதரவத்தை,
புத்தூர்.

திரு. திருமதி வே வல்லிபுரம்,
[இளைப்பாறிய ஆசிரியர்]
மயிலிட்டி தெற்கு,
தெல்லிப்பழை.

[C-6987]

## பிலிப்பைன்ஸின் —

# கொரஸோன் அரசியலமைப்பு!

கடந்த ஆண்டு ஜனவரியில் அரசியல்ரீதியாக பெருஞ் சவாலை எதிர்நோக்கிய பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி திருமதி கொரஸோன் அக்கினோ இந்த ஆண்டின் ஆரம்பத்திலும் 'அரசியல் அமைப்பு' தொடர்பாக சில எதிர்ப்புக்களை எதிர்நோக்கவேண்டியவராக உள்ளார்.

20 ஆண்டுகளுக்கும் மேலாக பிலிப்பைன்ஸ் ஜனாதிபதியாக விருந்த திரு. பேர்டினன்ட் மார்க்கோஸ் தமது நிலை முழுவதுக்குச் சாதகமாக்கிக் கொண்டிருந்ததே இதுவரை காலமும் இருந்த பிலிப்பைன்ஸ் அரசியல் அமைப்பாகும் [Constitution]

கடந்த ஆண்டு பெப்ரவரியில் பிலிப்பைன்ஸில் ஆட்சியைக் கைப்பற்றிய திருமதி அக்கினோ, தமது நாட்டின் அரசியல அமைப்பில் மாற்றம் கொண்டுவரப்படுமென அறிவித்திருந்தார். இதற்கு அவரது அமைச்சரவைச் சகாக்கள் மற்றும் பொதுமக்களிடமிருந்தும ஆதரவு கிடைத்திருந்தது.

இந்த ஆதரவையடுத்தே இன்று புதிய அரசியல் அமைப்பை அமுலாக்குவதற்கான மக்கள் அனுமதியைப் பெறும் தேர்தலில் திருமதி அக்கினோ குதித்துள்ளார்.

கடந்த ஆண்டு பதவிக்கு வந்த பின்னர், அவர் சந்திக்கும் முதலாவது தேர்தல் இதுவாகும். பிலிப்பைன்ஸில் வேரறுக்க முடியாத விருட்சமாக விளங்கிய பேர்டினன்ட் மார்க்கோஸ தமது மன உறுதியாலும் கட்டுப்பாடான அரசியல் நடவடிக்கைகளாலும், மண் கவ்வச் செய்தவர் திருமதி அக்கினோ.

எனவே அந்த அரசியல் 'கில்லாடி'யை வென்றவருக்கு அக்கில்லாடியால் பேணப்பட்டுவந்த அரசியலமைப்பை




மாற்றுவதில் தடங்கல் இருக்காது ஆயினும், தமது கடந்த ஒருவருட காலத்துள் முளைத்த அரசியல் எதிர்ப்புக்களையே புதிய அரசியல் அமைப்பு அமுலாக்கல் தேர்தலில் திருமதி அக்கினோ சந்திக்கவேண்டியவராக உள்ளார்.

அரசியல் முரண்பாடு குறிப்பாக பிலிப்பைன்ஸ் கம்யூனிஸ்ட் கெரில்லாக்கள் சம்பந்தப்பட்ட கருத்துவேறுபாடு காரணமாக திருமதி அக்கினோவினால் அமைச்சரவையில இருந்தும் அகற்றப்பட்டவரே முன்னாள் பாதுகாப்பமைச்சர் திரு என்றிலேயாவார்

இவரே புதிய அரசியல் அமைப்பு விடயத்தில் திருமதி அக்கினோவுக்கு எதிராக கடும் பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளார். இவருடன் முன்னாள் ஜனாதிபதி பேர்டினன்ட் மார்க்கோஸின் ஆதரவாளர்கள் சிலரும் அரசியல் அமைப்பு மாற்றத்துக்கு எதிராக பிரசாரஞ் செய்கின்றனர்.

திருமதி அக்கினோ பிலிப்பைன்ஸ் ஜனாதிபதியானதும், பிலிப்பைன்ஸ மக்களைக் காப்பாற்ற வந்த 'விடிவெள்ளி' அவர் என்று வாயார கொரஸோன் அக்கினோவை வரவேற்றவரே திரு. என்றலே. இன்று அதே என்றிலே பிலிப்பைன்ஸ் நாட்டவரை அடிமைப்படுத்தும் திட்டமே புதிய அரசியல் அமைப்பாகும் என்று கூறியிருப்பது வியப்பைத் தருகிறது. அவரின் இக் கூற்றில் சுயநலமே நிறைந்திருப்பதை மக்கள் நன்கறிவர் யார் எதை எதிர்த்தாலும் பிலிப்பைன்ஸ் காரர்கள் அரசியலில் புதிய மாற்றங்களையே எதிர்பார்க்கின்றனர். எனவே அவர்கள் திருமதி கொரஸோன் அக்கினோவின் புதிய அரசியல் அமைப்பையும் நிச்சயம் ஏற்கவே செய்வார்கள்.

### வெற்றிப்பாதையில் நஜிபுல்லா

ஆப்கானிஸ்தான் அதிபர் டாக்டர் நஜிபுல்லாவின் அரசியல் நடவடிக்கைகள் தற்போது நல்ல விளைவுகளைத்தர ஆரம்பித்துள்ளன.

அவர் செய்துகொண்ட ஒருதரப்பான போர்நிறுத்தத்தின் பிரதிபலிப்பே ஆப்கானில் ஏற்பட்டுவரும் புதிய முன்னேற்றங்களாகும்.

டாக்டர் நஜிபுல்லாவின் போர்நிறுத்த அறிவிப்பையடுத்து பெருந்தொகையான சோவியத்துருப்புக்கள் ஆப்கானிஸ்தானின் மூலைமுடுக்குகளிலிருந்து வாபஸ்பெற்று தலைநகரான காபூலை வந்தடைந்துள்ளன. இதேவேளை சோவியத்துருப்பினரில் ஒரு பகுதி விரைவில் வெளியேறும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆப்கான் கிளர்ச்சியாளர்கள் போர்நிறுத்தத்தை ஏற்காவிடினும், நஜிபுல்லா நிர்வாகத்தின் ஒருதரப்பான போர்நிறுத்த அறிவிப்பு அவர்களையும் துப்பாக்கிகளை கீழேபோட வேண்டிய நிலைக்கு தள்ளியுள்ளது ஏனெனில் போர் புரிய எவரும் இல்லாததே இதற்குக் காரணம்

ஆப்கானிஸ்தானில் கடந்த 7 வருடங்களாக சோவியத் துருப்புக்களின் ஆக்கிரமிப்புடன் நிகழ்ந்து வந்த சீரற்ற அரசியல நிர்வாகம், தற்போது ஒழுங்குபடுத்தப்பட்டுவருவதை நஜிபுல்லாவின் நடவடிக்கைகள் உணர்த்துகின்றன.

இந்த இளந்தலைவரின் துணிச்சலான அரசியல் நடவடிக்கைகள் இந்த ஆண்டின் நடுப்பகுதிக்குள் ஆப்கானிஸ்தானில பாரியமாற்றங்களை ஏற்படுத்தினாலும் வியப்படைவதற்கெதுவுமில்லை நிச்சயம் அவை நலமாற்றங்களாகவே இருக்கும்.

— அனந்த் —

## முப்பது அகதிகள் மன்னார் வந்தனர்

கொழும்பு, சனி

மன்னாரிலிருந்து தென் இந்தியாவிற்கு அகதிகளாக சென்ற மேலும் முப்பது பேர் நேற்று நாடு திரும்பியுள்ளதாக இலங்கை அரசு தெரிவித்துள்ளது.

படகு ஒன்றில் தலைமன்னார் வந்து சேர்ந்த இக்குழுவில் பதினாறு ஆண்களும் ஒன்பது பெண்களும் ஐந்து பிள்ளைகளும் இருந்ததாகவும் இவர்களை மீண்டும் பழைய இடங்களில் குடியமர்த்துவதற்கு மன்னார் அரசாங்க அதிபர் ஏற்பாடுகளைச் செய்வார் என்றும் அவ் அரச வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (சி)

## இன்று கூட்டம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ் மாவட்டத்தில் உள்ள ப.நோ.கூ. சங்கங்கள் ஒருங்கிணைந்து மொத்தக் களஞ்சியம் அமைப்பது சம்பந்தமான நீண்டகாலத்திட்டம் ஒன்றைத் தயாரிப்பதற்கான கூட்டம் ஒன்று இன்று காலை தெல்லிப்பழை ப.நோ.கூ. சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.தேசிய கூட்டுறவுச் சபைத்தலைவரும் தெல்லிப்பழை ப.நோ.கூ. சங்கத்தலைவருமான திரு சி. சிவமகாராசா தலைமையில் நடைபெறவிருக்கும் இக்கூட்டத்திற்கு சகல ப.நோ.கூ. சங்கத்தலைவர்கள், பொது முகாமையாளர்கள் அழைக்கப்பட்டுள்ளார்கள். (வா)

## அமைச்சர் ராமச்சந்திரன் கோரிக்கை

சென்னை, ஜன. 17

இலங்கை இனப்பிரச்னைக்கு தீர்வு காணப்படும இந்திய அரசும் தமிழ்நாடு அரசும தங்கள் நல்லெண்ண முயற்சிகளை தொடரவேண்டுமென்று இலங்கை அரசு விரும்புமேயானால் அங்கு வடபகுதியில் தொடர்ந்து அமுலில் இருக்கும் எரிபொருள், பொருளாதாரத்தடையை இலங்கை அரசு உடனடியாக வாபஸ் பெறவேண்டுமென்று தமிழ்நாடு உணவுத்துறை அமைச்சர் திரு எஸ் ராமச்சந்திரன் கூறியுள்ளார். (சி)

## எரிபொருள் தடையை ஆட்சேபித்து

# மினிபஸ் உரிமையாளர்கள் நாளை கண்டன ஊர்வலம்!

(அலுவலக நிருபர்)

வடபகுதியில் தமிழ் மக்கள் மீது அரசாங்கம் விதித்துள்ள எரிபொருள் தடையை ஆட்சேபித்து நாளை திங்கட்கிழமை வடபிராந்திய மினிபஸ்சேவை சங்கத்தினர், முற்றுமுழுதாக மினிபஸ்சேவையை நிறுத்தி வைத்து யாழ் நகரில் அமைதியான மாபெரும் ஊர்வலம் ஒன்றை நடாத்த முடிவு செய்துள்ளனர்

வடபிராந்திய மினிபஸ் சேவைச் சங்க இயக்குநர்சபை, நடாத்திய பத்திரிகையாளர் மகாநாட்டிலேயே குறிப்பிட்ட தகவல் வெளியிடப்பட்டது

கொக்குவிலிலுள்ள சங்கத்தின் தலைமைச் செயலகத்தில் அதன் தலைவர் திரு பொன் மதிமுகராசா தலைமையில் இவ் மகாநாடு நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

திங்கட்கிழமை மாலை 9-00 மணியளவில் கொக்குவில் உள்ள தலைமைக் காரியாலயத்திலிருந்து ஆரம்பமாகவிருக்கும் இந்த ஊர்வலத்தில் சகல மினிபஸ்களின் உரிமையாளர்களையும் ஊழியர்களையும் கலந்து கொள்ளுமாறுவேண்டு கோள் விடுக்கப்பட்டுள்ளது

யாழ். செயலகத்தில் ஊர்வலம் முடிவுறும். அங்கு எரிபொருள் தடையால் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் குறித்த மகஜர் ஒன்றை யாழ். அரசாங்க அதிபரிடம் ஊர்வலத்தினர் கையளிப்பர்

### மினிபஸ் கட்டி இழுப்பர்

இந்த ஊர்வலத்தில எரிபொருள் தடையால் ஏற்பட்டுள்ள நிலைமையை எடுத்துக் காட்டும் முகமாக மினிபஸ் ஒன்றையும் ஊர்வலத்தினர் வடக்கயிறு கொண்டு செயலகம் வரை இழுத்துச் செல்வதெனவும் முடிவு செய்துள்ளனர். [மா]

## ஐந்துடெஸ்ட் - ஆறுஒருநாள் போட்டி:

# பாகிஸ்தான் கிரிக்கெட் அணி நேற்று இந்தியா வந்தது

புதுடில்லி, ஜன 17

இந்திய கிரிக்கெட் அணியுடன் ஐந்து டெஸ்ட் போட்டிகளிலும ஆறுசர்வதேச ஒருநாள் போட்டிகளிலும் கலந்து கொள்வதற்காக பாகிஸ்தான் கிரிக்கெட் அணி நேற்று இம்ரான் தலைமையில் பம்பாய் வந்தது

மூன்றுமாதகால சுற்றுப் பயணத்தை மேற்கொண்டு வரும் பாகிஸ்தான் அணியில் பல புதிய ஆட்டக்காரர்கள் சேர்க்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது

இவ்வணிகள் ஐந்து டெஸ்ட் போட்டியிலும் ஆறு ஒருநாள் போட்டியிலும் மூன்று மூன்று நாள் போட்டியிலும் கலந்து கொள்ளும்.

முதலாவது டெஸ்ட்போட்டி பெப்ரவரி மாதம் மூன்றும் திகதி சென்னை சேப்பாக்கம் சிதம்பரம் மைதானத்தில் ஆரம் மாகும்

இத்தொடர் போட்டிக்கு இந்திய அணிக்கு கபில்தேவ் தலைமைதாங்குவார். [சி]

## கிளிநொச்சியில்

# 3கிராம ஆஸ்பத்திரிகள் நிறுவ நடவடிக்கை

(கிளிநொச்சி நிருபர்)

கிளிநொச்சி மாவட்டத்தில் மூன்று புதிய கிராம ஆஸ்பத்திரிகளை நிறுவ நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது

கிளிநொச்சி மாவட்ட சுகாதார தேவைகள் சம்பந்தமான மகாநாடு மாவட்ட அரச அதிபர் ஜெரா செர்தில்நாதன் தலைமையில ஆனையிறவு உப்பு கூட்டுத்தாபன சுற்றுலா விடுதியில் நடைபெற்றபோது மேற்கண்ட முடிவு எடுக்கப்பட்டது.

இம்மகாநாட்டில் பிராந்திய சுகாதார அத்தியட்சகர் டாக்டர் கனகசபை, திட்டமிடல் பிரதிப்பணிப்பாளர் திரு சுவாமிநாதன், கிளிநொச்சி பிரஜைகள்குழுப் பிரமுகர்கள் எம் இராமநாதன், திரு ஞானலிங்கம், திரு சிவராசசிங்கம், கிளிநொச்சி நீதிபதி திரு. சிதம்பரநாதன் ஆகியோரும் இம்மகாநாட்டில் கலந்துகொண்டனர்.

கிளிநொச்சியில் மரணமானோரை சடல பரிசோதனை செய்ய போதிய சட்டவைத்திய அதிகாரிகள் இல்லாமையால் தகுதியான தனியார் வைத்திய அதிகாரிகள் சடல பரிசோதனை மேற்கொள்ள அனுமதிப்பதெனவும் மகாநாட்டில் முடிவுசெய்யப்பட்டது

கிளிநொச்சிப் பகுதியில 12 மருத்துவ மாதுக்களுக்கு வெற்றிடம் உள்ளதாகவும் தற்காலிகமாக கடமையாற்றுவோரை மூன்று மாதத்தில் நிரந்தரமாக்குவதெனவும் தெரிவிக்கப்பட்டது

பாரதிபுரத்திலும், புதுமுறிப்பிலும் வாரத்தில் ஒரு தினம் நடமாடும் சிகிச்சை நிலையங்களை நடத்துவதெனவும், பாம்புக்கடி, மற்றும் விச சம்பந்தப்பட்ட சிகிச்சைகளை அக்கராயன் ஆஸ்பத்திரியில் வைத்து நடத்துவதெனவும், முரசுமோட்டை ஆஸ்பத்திரியில மருந்துகளை பாதுகாக்க குளிர்சாதனப் பெட்டிகளை தருவிப்பதெனவும், சலம் மற்றும் இரத்தபரிசோதனைகளை பளை ஆஸ்பத்திரியில் வைத்து மேற்கொள்வதெனவும் தீர்மானிக்கப்பட்டது. [ஒ]

## தமிழ்ப்படங்களுக்கு கதை எழுத எம். ஜி. ஆர். முடிவு

சென்னை, ஜன 17

தமிழக முதலமைச்சர் திரு எம். ஜி. ராமச்சந்திரன் மக்களுக்கு தமது விளக்கத்தை அளிக்கும் வகையில் தமிழ்த் திரைப்படங்களுக்கு கதை வசனமெழுத முடிவுசெய்துள்ளார்.

தமிழ்த் திரைப்படங்களைக் கௌரவித்து பரிசு வழங்கிய நிகழ்ச்சியொன்றிலேயே திரு ராமச்சந்திரன் இத்தகவலை வெளியிட்டுள்ளார்.

இவ்விழாவில் இசையமைப்பாளர் திரு எம் எஸ். விஸ்வநாதன் பின்னணிப்பாடகர் திரு டி. எம். சௌந்தரராஜன், பின்னணிப் பாடகிகள் திருமதி பி. சுசிலா, எல் ஆர், ஈஸ்வரி, எஸ். ஜானகி ஆகிய ஐவரையும் முதலமைச்சர் கௌரவித்து பரிசுகள் வழங்கினார். (சி)

## குண்டைப்பிடித்த பொலிஸாருக்கு சன்மானம்

கொழும்பு, சனி

வெள்ளவத்தையில் நேற்று முன்தினம் சக்திவாய்ந்த வெடிகுண்டொன்றை சிலர் பவுசர் ஒன்றில் பொருத்தி வெடிக்க வைக்க முனைந்த முயற்சியில் அக்குண்டுகளை கண்டுபிடித்த பொலிஸ் உத்தியோகத்தர் இருவருக்கு தலா 25 000 ரூபா சன்மானம் வழங்கப்பட்டுள்ளது. [சி]

## வெளிநாட்டவர் இருந்தார்

(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு கல்லடி இராணுவ முகாமில் நேற்று முன்தினம் தரையிறங்கிய விமானத்தில் வெளிநாட்டைச் சேர்ந்த ஒருவரும் இருந்ததாகத் தெரியவந்துள்ளது. [கு-மா]

# எரிபொருள் தடை நீக்கப்பட்டாலன்றி பேச்சில்லை!

## —விடுதலைப்புலிகள்

வட பகுதிக்கு எரிபொருள் தடையை விதித்துள்ள இலங்கை அரசு இத்தடையை நீக்கினாலன்றி தமிழீழ விடுதலைப் புலிகள் இலங்கை அரசுடன் எவ்விதப் பேச்சுவார்த்தைகளையும் நடத்தமாட்டாதென விடுதலைப் புலிகளின் சிரேஷ்ட பேச்சாளர்களில் ஒருவரான ரஹீம் பி.பி.ஸி யின் இலங்கை நிருபருக்கு அளித்த தொலைபேசிப் பேட்டியில் தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசுடன் நேரடிப் பேச்சுவார்த்தை நடத்துவதற்கான இலங்கையரசுடன் தமக்கு எவ்வித நம்பிக்கையும் இல்லாதபடியால் இந்தியாவின் சம்பந்தமும் சம்மதமுமின்றித் தாம் இலங்கையரசுடன் நேரடிப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடப்போவதில்லை எனக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையரசு கொடுத்து வரும் நெருக்கடி நிலைகளுக்குத் தாம் பணியமாட்டோமெனக் கூறிய ரஹீம், உணவுப் பொருட்கள் மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பப்படுவதை இலங்கையரசு வேண்டுமென்றே தாமதப்படுத்திவருவதாகவும் குற்றம் சாட்டியுள்ளார்.

யாழ்ப்பாணத்திற்கு உணவுப் பொருட்களை விநியோகித்துவரும் லொறிகள் ஆனையிறவு இராணுவத் தடை முகாமில் நான்கு, ஐந்து நாட்களுக்கு தாமதப் படுத்தப்படுவதால் பல உணவுப் பொருட்கள் வெகுவாகப் பழுதடையும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

...கான விடுதலைப் புலிகள் போர் நிறுத்த உடன்படிக்கை ஒன்றை ஏற்படுத்தப்போகிறார்கள் என இந்தியாவிலிருந்து வந்த செய்திகளையும் ரஹீம் ஆணித்தரமாக மறுத்துள்ளார்.

யாழ்ப்பாணத் தளபதி கிட்டு உட்பட இரண்டே இரண்டு வட்டாரத் தளபதிகள் மட்டுமே இப்பிரச்சினைக்குச் சமாதானத் தீர்வு ஏற்படுவதை எதிர்த்துவருகிறார்கள் எனக் கூறப்படும் வதந்தியையும் வன்மையாக மறுத்த ரஹீம், இலங்கை அரசின் இந்தத் தடையை தாம் ஏற்கனவே எதிர்பார்த்திருந்ததாகவும், இந்தநிலைமையைத் தங்களால் சமாளிக்க முடியுமென்றும் அவர் குறிப்பிட்டார்.

இலங்கையரசு இப்பொருளாதாரத் தடையைத் தீவிரப் படுத்தினால் விடுதலைப் புலிகள் இயக்கம் என்ன நடவடிக்கைகள் எடுக்குமென்று பி.பி.ஸி நிருபர் திரு ஜோன் ரெட்டி கேட்டபோது—

இந்தியா இலங்கை அரசுக்கு நெருக்கடி கொடுக்குமெனத் தாங்கள் நம்புவதாகவும் ரஹீம் தெரிவித்தார்.

**லண்டன் பி.பி.ஸி. ஸ்தாபனம் இலங்கை நிலைமைகள் பற்றிய கண்ணோட்டமொன்றை அண்மையில் ஒலிபரப்பியது அவற்றை பி.பி.ஸி யின் இலங்கை நிருபர் திரு ரெட்டி, இந்திய ஆய்வாளர் திரு ராஜப்பா ஆகியோர் வழங்கியிருந்தனர் இதனை இங்கு தொகுத்துத் தருகின்றோம்.**

தொகுப்பு:- ரி. சிவகணேசன்

### மட்டக்களப்பு நிலைமைகள்

மட்டக்களப்பில் மக்கள் இனப் பிரச்சினையால் எவ்வளவு இன்னல்களுக்கு உள்ளாகியிருக்கிறார்கள். மக்களின் அன்றாட வாழ்க்கை எந்த அளவிற்குப் பாதிக்கப்பட்டுள்ளது என்பதை மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திரு அந்தோனிமுத்து பி.பி.ஸி நிருபருக்குத் தெளிவாகக் கூறினார்

அதன் விபரம் வருமாறு:-

முக்கியமாக இப்பகுதி மக்கள் பாதுகாப்பைப் பெரும் பிரச்சினையாக எதிர்நோக்க வேண்டியுள்ளது. அவர்களது பாதுகாப்பிற்காகவும் உயிர்கள், உடைமைகளுக்காகவுமே அவர்கள் முதலில் பெரிதும் பயப்படும் நிலை இங்குள்ளது.

அடுத்தபடியாகவே அவர்களது பொருளாதார வாழ்க்கை. அதாவது அத்தியாவசிய தேவைகளான உணவு, உடை, போக்கு வரத்துக்குத் தேவையான எரிபொருள்களைத் தாம் மிகவும் கஷ்டமான நிலைகளிலேயே வழங்க வேண்டியுள்ளது. ஆனால் முக்கியமாக இரவு நேரங்களிலே அதாவது மாலை ஆறு மணிக்குப் பின் மக்கள் வீடுகளைவிட்டு வெளியே நடமாட முடியாத நிலையால் மக்களின் சமூக வாழ்க்கை பெரிதும் பாதிக்கப் பட்டுள்ளது.

அவர்கள் தங்களுடைய அன்றாட வாழ்க்கைக்கான தொழில்களைக்கூட இப்பிரச்சினைகளால் விருத்திசெய்ய முடியாத நிலையில் உள்ளனர். தற்போது அங்கு மிகவும் கஷ்டமான நிலை ஏற்படவில்லையாயினும் விசேஷமாகப் பாதுகாப்புக் காரணமாகவும் போக்குவரத்துக் காரணமாகவும் பயிர்செய் நிலங்களில் கிட்டத்தட்ட நாற்பது வீதமானவை பயன்படுத்தப்படாமலே உள்ளன.

எனவே, தற்போதைக்கு இம்மாவட்டத்தில் உணவுப் பிரச்சினை தீவிரமாக ஏற்படாத போதிலும் இந்நிலைமை தொடருமானால் வெகுவிரைவில் உணவுப் பற்றாக்குறை ஏற்படும். மக்களது போஷாக்கும் விரைவில் பாதிக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளது.

அனைவரும் இந்நிலைமைமாறி தங்கள் வாழ்க்கை முன்னரைப் போல் சுமுகமாக நடக்கவேண்டும் என்றே விரும்புகிறார்கள் என்றும் திரு. அந்தோனிமுத்து தெரிவித்தார்.

### போராளிகள் மறைவு?

தமிழ் நாட்டிலிருந்து செயல்படும் தமிழ் போராளிகள் குழுக்களை தமிழ் அகதிகளைப் போலவே முகாம்களுக்குள் முடக்கி வைக்க தமிழ்நாடு அரசு முயற்சி செய்து வருகிறதென்று வெளிவரும் செய்திகளைத் தொடர்ந்து அங்குள்ள சில இயக்கங்களின் போராளிகள் மறைந்துவாழத் தொடங்கியுள்ளதாகவும் வேறு சில இயக்கங்கள் தமிழ் நாட்டிலிருந்து வேறு இடங்களிற்கு மாறியிருப்பதாகவும் பி.பி.ஸி. தெரிவித்தது.

# "போராளிகளுடன் பேசி இனப்பிரச்னை தீர்க்கப்படலாம்'

## அமைச்சர் காமினி கருத்து

கொழும்பு, வெள்ளி

"தமிழ்ப் போராளிகள் குழுக்களுடன் பேச்சுவார்த்தைகள் நடாத்துவதன் மூலம் இலங்கை இனப்பிரச்னைக்கு மிக விரைவில் சமாதான தீர்வொன்றை காணலாமென்று அமைச்சர் திரு காமினி திஸநாயக்கா குறிப்பிட்டுள்ளார்.

நேற்று அநுராதபுரத்தில் நடைபெற்ற வைபவமொன்றில் உரையாற்றுகையிலேயே திரு. திஸநாயக்கா இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்:

நாட்டை ஐக்கியப்படுத்தி சுதந்திரத்தையும் தன்னாதிக்கத்தையும் பாதுகாக்க துட்டகைமுனு மன்னன் அக்காலத்தில் எவ்வாறு நடந்து கொண்டானோ அதே வழியில் தற்போது இலங்கை அரசாங்கமும் இனப்பிரச்னைக்கு மிக விரைவில் நிரந்தர தீர்வொன்றை காண்பதற்கு முயற்சி செய்கிறது என்றும் கூறினார்.

இதேவேளை புதுடில்லியிலிருந்து இரு தினங்களுக்கு முன்னர் நாடு திரும்பிய அமைச்சர் திரு. காமினி திஸநாயக்கா, பிரதமர் ராஜீவ் காந்தியின் விசேடசெய்தியொன்றையும் ஜனாதிபதிக்குக் கொண்டு வந்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (கி)


நியூ விக்ரேஸ்

**புதிய ஓடியோ வெளியீடுகள்**

நகைச்சுவை

1. கவுண்டமணி PART - III 1-Hour
2. கவுண்டமணி PART - IV 1-Hour

கதைவசனம்

3. வசந்த ராகம் 1-Hour
4. உனக்காகவே வாழ்கிறேன் 1-Hour
5. இளையராஜா இன்னிசைக் கதம்பம் 1-Hour

**நியூ விக்ரேஸ்**

எலெக்ரோனிக் கொம்பிளெக்ஸ்

23, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

T. Phone; 23532. [A-3501]


## அன்ரன் பாலசிங்கம் அறிவிப்பு

ஈரோஸ் இயக்கத்தை தவிர வேறு எந்த இயக்கமும் இலங்கையில் ஈழம் கோரி ஆயுதப் போராட்டம் நடாத்தக் கூடாதென விடுதலைப் புலிகள் இயக்க தலைவர் திரு பிரபாகரன் தடைவிதித்துள்ளதாக அவ்வியக்கத்தின் சார்பில் முக்கிய பேச்சாளரான திரு. அன்ரன் பாலசிங்கம் கூறியுள்ளார்

ஏனைய இயக்கங்கள் பிரபாகரனின் தலைமையை ஏற்று விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு விசுவாசமாக நடப்பதாக உறுதி வழங்கினால் ஏனைய இயக்கங்களை ஏற்றுக்கொள்ள விடுதலைப் புலிகள் இயக்கம் தயாராக இருக்குமெனவும் திரு. பாலசிங்கம் குறிப்பிட்டுள்ளார்.

## தீர்வு பற்றி லலித்

இனப் பிரச்னைக்கு தீர்வு ஏற்படுமா இது இலங்கை மக்கள் மனதில் மேலோங்கியுள்ள கேள்வி இதனை பி.பி.சி நிருபர் திரு ஜோன் ரெட்டி தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு. அத்துலத் முதலியிடம் கேட்டபோது:

நீங்கள் கிழக்கு மாகாணத்திற்குச் சென்று நிலைமையை நேரில் பார்த்துள்ளீர்கள் அதனை கூறுபோடுவதென்பது எவ்வளவு கடினமான விடயமென்பதை நீங்கள் உணர்ந்திருப்பீர்கள், கிழக்கு மாகாணம் வெவ்வேறு இன மக்கள் கலந்து வாழும் பகுதி. அதனை தனி மாகாணமாக வேண்டுமென்பதே எமது அரசாங்கத் திட்டமாகுமென்று திரு அத்துலத் முதலி கூறினார்.

தலவாக்கொல்லை

## ஆசிரியர் கல்லூரி விரிவுரையாளர் கொலை தொடர்பாக மூவர் கைது

(நுவரெலியா நிருபர்)

தலவாக்கொல்லை ஆசிரிய பயிற்சிக்கல்லூரி உடற்பயிற்சி விரிவுரையாளர் கொலை சம்பந்தமாக சந்தேகத்தின் பேரில் மூவரை பொலிசார் கைது செய்துள்ளனர்

1986 அக்டோபர் 6-ம் திகதி இரவு உடற்பயிற்சி விரிவுரையாளர் என் பத்மநாதன் கல்லூரி விடுதிக்குள் வைத்து படுகொலை செய்யப்பட்டது தெரிந்ததே.

இக்கொலைச் சம்பவம் தொடர்பாக கண்டியிலிருந்து விசேஷ பொலிசார் விசாரணை மேற்கொண்டிருந்தனர்.

நேற்றுமுன்தினம் தலவாக்கொல்லையைச் சேர்ந்த சின்ன மல்லிகைப்பூ தோட்டத்தைச் சேர்ந்த செல்லையா வாமதேவன் (19 வயது), பழனிவேல் தீனதயாளன் (21 வயது), சாமித்துரை கதிரவேல் (27 வயது) ஆகிய மூவரும் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டவர்களாவர்.

இக்கொலைச் சம்பவத்துக்குப் பின்னர் தலவாக்கொல்லை ஆசிரியபயிற்சிக் கல்லூரி மூடப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (மா)

## தொழில்நுட்ப கல்வி எமது நாட்டிற்கு அவசியம்

நெல்லியடி சனி

"எமது சொந்தக் கால்களில் நாம் சுதந்திரமாக நிற்கக் கூடிய சக்தியை எமக்குத் தரக் கூடிய கல்வியே இன்று எமது மக்களுக்குத் தேவையானது"

இவ்வாறு பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண - சாரதா சேவாச்சிரமத்தில் நடந்த சுவாமி விவேகானந்தரின் 125 ஆம்பிறந்த தினத்தையொட்டி ஒழுங்குசெய்யப்பட்டிருந்த கல்விக் கருத்தரங்கில் உரையாற்றிய சுவாமி சித்ரூபானந்தா கூறினார்.

பருத்தித்துறை மெதடிஸ்த மகளிர் கல்லூரி அதிபர் திருமதி லீலாவதி சந்திரசேகரம் தலைமையில் நடந்த இக்கருத்தரங்கில் சுவாமி சித்ரூபானந்தா தொடர்ந்து பேசியதாவது:-

"எமது நாட்டுக்குத் தொழில்நுட்பக் கல்வி அவசியமானது. அதன்மூலம் கைத்தொழில்களை அபிவிருத்தி செய்தால் சமுதாயத்தின் தயவில் வாழ நேரிட்டவர்கள் எவரது உதவியுமின்றித் தங்கள் தேவைகளைப் பூர்த்திசெய்துகொள்ள முடியும்" என்றார். [ஒ]

## 'குப்பைகளை வீதியில் போடாது வளவுக்குள் புதைக்கவும்!"

### — ஆணையாளர்

யாழ்ப்பாணம், ஞாயிறு

"01-01-87 ஆம் திகதி தொடக்கம் அரசினால் அமுல் செய்யப்பட்ட எரிபொருள் தடை காரணமாக மாநகராட்சி மன்ற நகரசுத்தி வாகனங்களைப் பாவிக்க முடியாத நிலை எழுந்துள்ளது. இருப்பிலிருந்த எரிபொருளைக் கொண்டு 06-01-87 வரை சேவையாற்றக்கூடியதாக இருந்தது. அதற்குப்பின் நகரின் எல்லாப்பாகங்களிலும் உள்ள குப்பை கூழங்களை அகற்ற முடியாநிலை இருந்து வருகிறது. இதனால் நகர மக்கள் குப்பைகளை வீதியில் போடாது வீட்டு வளவுகளுக்குள்ளேயே வெட்டிப் புதைக்கவும்" என்று யாழ் மாநகரசபை ஆணையாளர் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

நாளாந்தம் சுமார் 30டிரக்ரர் லோட் குப்பை கூழங்கள் மாநகராட்சி மன்றத்தால் அகற்றப்பட்டு வருகிறது. இதனடிப்படையில் கடந்த 10 நாட்களில் சேர்ந்த குப்பைகளே 300 லோட் வரை கணக்கிடப்படலாம் இந்நிலையில் குப்பைகூழங்கள் நகரில் குவிவது பாரியசுகாதாரக்கேட்டை ஏற்படுத்தும் என்பதை எல்லோரும் உணர்வார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

எமது கட்டுப்பாட்டுக்கு அப்பாலுள்ள காரணிகளால் எழுந்த இந்த இக்கட்டான நிலைமைக் கூடுமானவரை சமாளிக்கவேண்டிய பொறுப்பு நகர மக்கள் ஒவ்வொருவரினது மாகும். எனவே தற்போதிருக்கும் சூழ் நிலையைக் கருத்திற்கொண்டு மாநகர குடியிருப்பாளர்கள் யாவரும் தத்தமது வீடுகளில் சேரும் குப்பைகளை வீதிகளில் போடாமல் தத்தமது வளவுகளுக்குள்ளேயே குழிகளை வெட்டிப் புதைத்துவிடுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம். அப்படி குழி வெட்டிப் புதைக்க வசதியில்லாதவர்கள் தமது வளவுகளில் சேரும் குப்பைகளை அங்கேயே எரித்து விடுமாறு கேட்டுக்கொள்கிறோம். (வா)

## தொடர் நவீனம்



# செங்கை ஆழியான்

# அக்கினி

இனிய காலையின் குளிர்ச்சி நீங்காத மண்ணில் கால்களை வைத்தபோது, உடலெல்லாம் ஒருவித பரவசம் ஏறியதைக் கனகசபை உணர்ந்தான். அவன் பிறந்து, ஓடித்திரிந்து விளையாடிய மண். நீண்ட நான்கு ஆண்டுகளுக்குப்பின், பிறந்த மண்ணில் கால் பதித்தபோது ஏக்கம் நீங்கிய உணர்வு.

அந்த ஏக்கமே தனி. அதை அனுபவித்தவர்களுக்குத்தான் அது புரியும். ஆயிரக் கணக்கான மைல்களுக்கு அப்பால் வெயிலிலும் பனியிலும் வாடி வதங்கி வேலை செய்துவிட்டு, உறக்கத்திற்காகக் கட்டிலில் சாயும்போது, அந்த ஏக்கம் விசுவரூபமெடுக்கும்.

அவனது கிராமமும் அவன் நித்தம் அலைந்து திரிந்த இடங்களும் மனக்கண்களில் நிழலாடும். கலட்டியின் ஒடுங்கிய ஒழுங்கைகளும், காற்பெருவிரலைப் பிளக்க வைக்கும் பீறிட்ட கற்களும், குடிசைகளும் ஏக்கங்களும், அவற்றிடையேயும் விலகியும் அமைந்திருக்கும் சிறிய கல்வீடுகளும் விரியும். ஆலடி வயிரவர் கோயிலும் பாரிய பரந்த ஆலின் நிழல் விரிவும், கோயிலை அண்மி அமைந்திருக்கும் சனசமூகநிலையமும் மனதில் இனிய ஏக்கத்தைத் தோற்றுவிக்கும். ஆலமரத்தின் கீழ் அவனொத்த இளைஞர்களுடன் அடித்த அரட்டைகளும், சந்தி மதகில் குந்தியிருந்து பாடசாலை செல்லும் மாணவிகளைப் பார்த்து இரசித்த வேளைகளும் நிழலாடி, இனந்தெரியாத ஏக்கத்தைத் தோற்றுவிக்கும்.

உழைத்து உழைத்து ஓடாகிப்போன தந்தை, பிள்ளைகளுக்காகத் தானும் கணவனுடன் உழைத்து ஓய்ந்துபோன தாய், நல்ல வாழ்க்கையை எதிர்பார்த்துக் காத்திருக்கும் இருதங்கைகள், பாடசாலை சென்று வரும் இரு தம்பிகள் ஆகியோரின் பாசமுகங்கள் மனதில் இதமாகப் பதியும்.

அந்த ஏக்கத்தோடு அவன் தூங்கிப்போவான். நான்கு வருட இரவுகளும் இவ்வாறே கழிந்து போயின.

அதிகாலையின் மலர்ச்சியில், கிராமத்தில் கால்களை ஊன்றியபோதுதான் பிறந்த மண்ணின் திருப்தி தரும் நிம்மதி தெரிந்தது. நான்காண்டுச் சிறைவாசத்திலிருந்து வெளிவந்து சுதந்திரக்காற்றைச் சுவாசிப்பது போன்றதொரு விடுதலையுணர்வு உடலெங்கும் பரவி வியாபிப்பதை அவன் புரிந்து கொண்டான்.

அவன் இறங்கி நின்றிருந்த வீதிச்சந்தியிலிருந்து, கலட்டிக் கிராமத்திற்குச் செல்வதாயின் மூன்று மைல்கள் போக வேண்டும். வெளிநாட்டிலிருந்து கொண்டுவந்திருக்கும் பொருள்கள் இரண்டு பெரிய சூட்கேசுகளிலும், இரண்டு றவலிங்பாக்குகளிலும் நிரம்பிக்கிடந்தன. அவற்றைவிட 'டெக்' 'ருன்சிஸ்ரர்' அடங்கிய இருபெட்டிகள் வேறு. இவற்றைக் காவிக்கொண்டு நடக்க முடியாது.

சந்தியில் ஏதாவது கார்கள் அகப்படுமாவென நோட்டம் விட்டான். பனிப்புகார் நீங்காத அந்த அதிகாலை வேளையில், சந்திக் கடைகள்கூடத் திறக்கப்படவில்லை. இரண்டு மூன்று நாய்களும் ஒரு கட்டாக்காலி மாடும் தென்பட்டன. தூரத்தில் பனைவடலிகளில் புகையாக வெண்பனிப் புகார் படர்ந்து கிடந்தது.

வேறு வழியில்லை. வாகனங்கள் ஏதாவது வரும்வரை காத்திருக்கவேண்டியதுதான். ஒரு சூட்கேசின்மீது அமர்ந்து கொண்டான்.

கலட்டிச் சந்தியில், புதிதாக இரண்டு மாடிக்கட்டிடங்கள் அமைக்கப்பட்டிருந்தன. அவற்றில் 'ஆறுமுகம் பில்டிங்ஸ்' என எழுத்துக்கள் பளிச்சிட்டன. அவற்றைவிடப் புதிதாகவேறு மாற்றங்கள் சந்தியில் ஏற்பட்டிருப்பதாகத் தெரியவில்லை.

ஓ கடைகளுக்கு அப்பால், இரு அன்ரனாக்கள் வானோக்கி உயர்ந்திருந்தன. ஒன்றில் பிணைக்கப்பட்டிருந்த வர்ண பிளாஸ்ரிக் கோப்பைகள், வாடைக்காற்றின் வீசலிற்கு ஈடு கொடுத்துச் சுழன்றன.

அவன் ஒரு கடைவாசலில் நின்றிருந்தான் அது மாணிக்கவாசகருக்குச் சொந்தமான தேநீர்க்கடை. அவன் டுபாய் சென்றபோது என்ன கோலத்தில் அக்கடை இருந்ததோ அக்கோலம் மாறாதிருந்தது. அதே கொளுவு பலகைக் கதவுகள். தகரத்தால் முன்பக்கம் நீட்டப்பட்ட மூன்றடி அகலமான விறாந்தை. அதன் ஒரு மரத்தூணில் கொளுவிக் கிடக்கும் தீக்கயிறு. அதில் இப்போதும் தீ கனன்று கொண்டிருப்பதைக் கனகசபை கண்டான். ஏதோ நினைவில் சென்ற இரவு கனன்ற தீயை அணைக்காமல் மாணிக்கவாசகர் கடையைப் பூட்டிக் கொண்டு சென்றிருக்க வேண்டும்.

தீக்கயிறின் நுனியில் கனன்று கொண்டிருக்கும் நெருப்பைப் பார்த்ததும், ஒரு சிகரெட் புகைத்தால் என்ன என்ற எண்ணம் எழுந்தது. தூரத்தில் எவரோ வருவதைக் கண்டதும் அந்த எண்ணத்தை அடக்கிக்கொண்டான்.

தூரத்தில் சைக்கிளில் வருவது மாணிக்கவாசகராகத்தான் இருக்க வேண்டும். நெருங்கியபோது அவர்தான் என்பது புலனாகியது. மாணிக்கவாசகருக்கு ஐம்பது வயதிருக்கும். அரையில் வேட்டி. தோளில் சால்வை. திருநீறு பூசிய நெற்றி.

கடையின் முன் சைக்கிளில் இருந்து இறங்கினார். வாசலில் வெளிநாட்டுப் பொருள்களோடு, கம்பீரமாக நிற்கும் இளைஞனை ஆழமாகப் பார்த்தார். இது அவருக்குப் புதியதொருகாட்சியன்று. கடந்த சில ஆண்டுகளாக அடிக்கடி தரிசிக்கும் காட்சிதான். அதிகாலைவேளைகளில் கொழும்பிலிருந்துவரும் சொகுசு டஸ்களில்வந்திறங்கி வீடுசெல்வதற்காகக் காத்திருக்கும், வெளிநாட்டிலிருந்து தாய்நாட்டிற்கு வரும் அக்கிராம இளைஞர்களை அவர் கண்டிருக்கிறார்.

சைக்கிளை ஓரமாக நிறுத்திவிட்டு கனகசபையை ஊன்றிப் பார்த்தார். அவரால் அவனை இலகுவில் அடையாளம் கண்டு கொள்ள முடிந்தது.

''எட நம்மடை சுப்பன்ர பொடி கனகுவே?...'' எனக் கேட்க எண்ணியவர் அவ்வாறு கேட்கவில்லை. பெல்ஸ் அணிந்து சேர்ட்டின்மேல் அழகானஜேர்கின்ஸ் விளங்க, கால்களில் முறையாக சொக்ஸ்போட்டுச் சப்பாத்துஅணிந்து கம்பீரமாக நின்ற கனகசபையின் கோலம் அவரை அவ்வாறு கேட்கவிடவில்லை.

''தம்பி கனகசபையே? இப்பத்தான் டுபாயிலிருந்து வாறீரோ?'' என்று மாணிக்கவாசகர் கேட்டார். அவருடைய பழுப்பேறியவேட்டியும் சால்வையும் அவன்முன் தான் பஞ்சப்பட்டு நிற்பதை உணர்த்துவதாக அவருக்குப்பட்டது.

''எட பொடி...'' ''எட கனகு...'' ''வந்திட்டுப் போடா..'' என்றெல்லாம் முன்னர் அழைத்த அவரால், இன்று அப்படி அழைக்கமுடியவில்லை. காலம்காலமாக, பரம்பரை பரம்பரையாக வாயிலிருந்து வெளிப்பட்ட வார்த்தைகள், இன்று மரியாதையோடு வருவதற்குக் காரணம் அவன் உடைகளா?

மாணிக்கவாசகரின் கேள்விக்குக் கனகசபை பதிலளித்தான்: ''ஓமண்ணை, நான்கு வருசத்துக்குப் பிறகு இப்பத்தான் வாறன்...''

'ஓம் ஐயா.'' என்றுதான் முன்னர் கனகசபை அவரை அழைப்பான். அவ்வாறு அழைக்காது ''ஓமண்ணை'' என்று அழைத்தது மாணிக்கவாசகருக்கு வித்தியாசமாகத் தெரிந்தது.

கடையின் ஆமப்பூட்டைத் திறந்தபடி அவர், ''அப்ப தம்பி, கனக்க உழைச்சிருப்பாய். கொப்பர் பெரிய வீடொன்றும் கட்டியிருக்கிறார்'' என்றார்.

''ஓமண்ணை... நாங்களும் நல்லா வரத்தானே வேணும். நெடுகஅப்படியே இருக்கிறதே? ஒரு இரண்டு இலட்சம் ரூபாவோடை வந்திருக்கிறன்...'' என்றான் கனகசபை.

''இரண்டு இலட்சமோ?...'' என்று மாணிக்கவாசகர் வாயைப்பிளந்தார். இரண்டு ரூபாய் கூலிக்காக மாணிக்கவாசகர் வீட்டிலுள்ள பன்னிரண்டு தென்னைகளிலும் ஏறித் தேங்காய் பறித்துப்போட்ட கனகசபை, இரண்டு இலட்சத்தோடு திரும்பி வந்திருக்கிறான் என்ற செய்தியை அவரால் நம்பவே முடியவில்லை.

கண்களை அகலவிரித்தார்.

கடைக்கதவின் கொளுவு பலகைகளைப் பிரித்து ஒருபுறமாகச் சார்த்தியபடி, ''அப்ப நீர் டுபாய்க்குக் கூப்பிட்ட தம்பன்ரை மோன் இராசு, முத்தன்ரை பேரன் தம்பி, வள்ளியின்ரமோன் முத்து எல்லாரும் நல்லா உழைச்சு அனுப்புறாங்கள் என்ன? கலட்டியில உங்கட பகுதியில ஐந்தாறு கல்வீடுகள் எழுந்திட்டுது நல்லதுதான்! நீ என்ரபொடியன் உன்னோடை திரிஞ்ச கந்தசாமியைக் கூப்பிட்டிருக்கலாம். கவனிக்காமல் விட்டிட்டாய்...''

கனகசபை அவரை இரக்கத்தோடு பார்த்தான்.

'நீங்கள் அல்லது கந்தசாமி ஒரு வார்த்தை எனக்கு எழுதியிருந்தால் நிச்சயமாகச் செய்திருப்பன் அண்ணை. நீங்கள் என்னைக் கேக்கிறது சௌரவக் குறைவென்று எழுதவில்லைப் போல...''

மாணிக்கவாசகர் கூனிக்குறுகிப்போனார். சிலகணங்கள் எதுவும் பேசமுடியவில்லை. மெய்ம்மையின் தாக்கம் பலமாக விழுந்தது. அவர் தனது மகனை வெளிநாட்டிற்கு அனுப்புவதற்காக அவருடைய நண்பர்கள், உறவினர்கள் பலரிடம் இரந்திருக்கிறார். பத்தாயிரம் ரூபாய்வரை ஒருவனிடம் கொடுத்து ஏமாந்திருக்கிறார்.

''தம்பி, கனகசபை, தேத்தண்ணி [illegible]றன் குடிச்சிட்டுப்போம்...''

''இப்ப டுபாயில, சவுதியில முந்தினைப்போல இல்லை வேலைகளுக்கு ஆக்கள் கனக்க வருவதால சம்பளமும் குறைவு. போட்டி அதிகம். நீங்கள் கவலைப்படாதையுங்கோ. இம்முறை நான் போகேக்கை கந்தசாமியைக் கூட்டிப்போகத் தெண்டிக்கிறன்.''

மாணிக்கவாசகர் நன்றியோடு அவனைப் பார்த்தார்.

''நீர் அப்படிச் செய்தீரெண்டால் நான் உயிருள்ளவரை மறக்கமாட்டன்'' அவர்குரல் தளுதளுத்தது. இந்தத் தேத்தண்ணிக்கடையால ஆமான வருமானமில்லை இரண்டு குமருகள் வீட்டில. இப்பத்தை யாழ்ப்பாணத்து நிலவரத்தால, கந்தசாமியையும் ஒரு குமரைப்போல வீட்டில பொத்தி வைச்சுச் சாப்பாடு போடுறன்...''

''கந்தசாமி தொடர்ந்து படிச்சு ஏ. எல். எடுத்தவரெல்லோ...?''

''இரண்டு முறை எடுத்தான்... இருநூற்றி முப்பது வரை மார்க்ஸ் எடுத்தும் யூனிவேசிற்றி கிடைக்கவில்லை. ஆனா இவனிலும் குறைய மார்க்ஸ் எடுத்தவங்களுக்கெல்லாம் யூனிவேசிற்றி கிடைச்சிருக்குது...''

அவர் மிக நிதானமாகக் கழுவிய எவர்சில்வர்பேணியில் தேநீரை வார்த்து அவனிடம் நீட்டினார். அவன் வாங்கிக் கொண்டான். அவன் சிறுவனாக இருந்தபோது, இந்தச் சந்தியில் நிகழ்ந்த தேநீர்க் கடைப்பிரவேசப் போராட்டத்தை நினைவுபடுத்த முயன்றான். யாழ்ப்பாணத்திலிருந்து தீண்டாமை வெகுஜன இயக்கத்தைச் சேர்ந்த பலர் வந்திருந்தார்கள். கிராமத்திலுள்ள துணிச்சலான பலரும் அவர்களுடன் சேர்ந்துகொண்டார்கள். சந்தியிலுள்ள தேநீர்க் கடைகளில் பஞ்சமர்களுக்கெனப் புறம்பாக வைக்கப்பட்டிருந்த பாத்திரங்கள் அடித்து உடைக்கப்பட்டு, தேநீக்கடைப்பிரவேசம்நடந்தது மாணிக்கவாசகரின் கடையும் அவற்றில் ஒன்று.

(8ம் பக்கம் பார்க்க)

## வழங்குக வாழ்வு நீரே!

அன்பினைத் தேடித் தேடி
அணைப்பதே தூய்மை என்றும்
இன்பத்தின் வேர்கள் தேடி
இணைவதே காதல் இந்தப்
பண்பதன் மெய்மை காக்கப்
பணிந்திடா இளைஞர் கூட்டி
வன்மையாய் எழுந்து சீர்
வரிசைகள் களைதல் வேண்டும்!

நாடுகள் தோறும் பெண்கள்
நலன்களை விளைவார் இங்கோ
வீடுகள் தோறும் பெற்றோர்
விரக்தியின் பெருமூச் சுக்கள்
சாடுவர் சீதனப் பேய்
சாகட்டும்; வேடம் வேண்டாம்
தேடுங்கள் பெண்ணை ஏற்கும்
தூய்மைகள் கருக்கொள் ளட்டும்!

சொற்களை அடுக்கி மேடை
சுவைபட விழித்துக் கூறி
விற்பனைப் பொருளா பெண்கள்
வீட்டிற்கு விளக்கா? என்ற
அற்புத உரைகள் பின்னி
அணங்கினை உயர்த்தும் தாய்மைக்
கற்பனைக் கதை கிழித்துக்
கருத்திலே துணிவு கொள்வீர்!

வீட்டுக்கு வீடு இங்கே
வீழுது கண்ணீர்; பெண்ணை
வாட்டியே வதைத்து ஒன்றாய்
வெயதுமே கூட்டு தந்தோ:
ஆட்டுது சீதனப் பேய்
ஆண்களின் மன திருந்து
மீட்சிதான் உண்டா? பெண்ணை
மிஞ்சிய தனந்தான் உண்டோ?

இளைஞரே எழுக! எங்கள்
இதயங்கள் நிமிர்க வஞ்சி
அழுகைகள் துடைத்து அன்பால்
அவருக்கு வாழ்வு செய்க!
இளமையின் செழுமை: செல்வம்
இலையெனின் இறக்க லாமோ?
பழமைகொள் வாதம் போதும்
பணமென்ன பண்பின் முன்னே!

-நெடுந்தீவு லக்ஸ்மன்

# பாஸ்போட் இல்லாத பறவை நான்

[4]

அன்றைய தினம் எப்படியோ புதுமனைத் தெருவில் கழிந்து விட்டது. தம்பிக்கோட்டையார் குறித்த நேரத்தில் திரும்பிவந்தார் ஆனால் மயூரனே திரும்பிவரவில்லை.

மயூரன் பலதடவை தமிழ் நாட்டுக்குச் சென்றவர்; ஆகையால் பல இடங்கள் அவருக்குத் தெரியும். எனவே அவரை நீக்கி எமது பயணத்தை நாம் தொடங்க எண்ணினேம்! அகதி முகாமுக்குப் போனல் உம்மை வெளியே போகவிட மாட்டார்கள். எனவே எனது செலவில் தமிழ் நாட்டை இன்று சுற்றிப்பார் என்ருர் தம்பிக்கோட்டையார்!

அதிராம்பட்டினத்தில் இருந்து பட்டுக்கோட்டை நோககி அந்த பஸ் புறப்பட்டது. பாப்பாநாடு, ஒரத்த நாடு எல்லாம் தாண்டி பஸ் ஓடிக் கொண்டிருந்தது. ஸ்ரொப்! சுங்க இலாகா அதிகாரிகள் டஸ்ஸை நிற்பாட்டினர்! மரங்களில் குரங்குகள் தாவி ஏறுவது போல பஸ்ஸில் அவர்கள் ஏறியதே தனி அழகு!

'சிலோன்காரன் யாராவது இருந்தால் பாருங்கள்' என அந்த சுங்க அதிகாரி தனது ஊழியரைப் பணித்தார். என் மனம் 'திக' என்றது. தமிழ் நாட்டுக்காரர்களின் மீசை வேறு விதமாக இருக்க எனது மீசை வேறு வடிவில் இருந்ததை நான் அவதானித்தேன்! நான் கொண்டுசென்ற துவாயால் எனது தலையை மூடிக் கொண்டேன். எனது முகமோ நோயாளிபோல் காட்சியளித்தது. என்னருகே வந்த சுங்க அதிகாரி என்னைச் சற்று நோட்டம் விட்டார். பின்பு இவன் யாரோ ஒரு நோயாளி என இறங்கிச் சென்று விட்டார்.

பஸ் புறப்பட்டது. பட்டுக்கோட்டை பஸ் நிலையத்தை பஸ் வந்தடைநதது.

தமிழ்நாட்டின் அழகே அழகு. டஸ் நிலையம் தமிழ் நூல்களாலும், சஞ்சிகைகளாலும் நிறைந்து கிடந்தது. புடைவைகள், அழகு சாதனப் பொருள்கள் யாவும் பட்டுக்கோட்டையில் நிறைந்திருந்தன. உணவுப் பொருடகள்

## உண்மைக்கதை

எல்லாம் கொள்ளை மலிவு. எதனை வாங்குவது எதனை விடுவது. அடடா... எமது வீடுகளிலே தொங்கும் சில வர்க் குவளைகள் மலைபோல் மலிவான விலையில் குவிக்கப் பட்டுள்ளதே... என் மனம் குதூகலித்தது தம்பிக்கோட்டையாரே முதலில் ஒரு கடைக்கு அழைக்குச் செல்லும்... நாம் சாப்பிடுவோம்.

பஸ் நிலயத்தில் இருந்த ஹோட்டல் ஒன்றில் நாம் நுழைந்தோம். தமது ஹோட்டலில் விற்பனைக்காக வைக்கப் பட்டிருந்த எழுபத்தைந்துக்கு மேற்பட்ட உணவுப் பொருட்களின் பட்டியலை அவர் அங்கு போட்டிருந்தார்!

தோசை, இடியப்பம், பிட்டுக்குமேல் எதுவுமே இல்லாத யாழ்ப்பாணத்து ஹோட்டலை விட இது எவ்வளவு நேர்த்தியாக இருக்கிறது! விதம் விதமான உணவு வகைகளின் பின்பு நான் சாப்பிட்டு முடித்த இட்டலியின் தொகை 10. இன்று கடையையே முடித்து விடுவாய் போலிருக்கே பாணபத்திரா என தம்பிக்கோட்டையார் மீசையை முறுக்கிக் கொண்டார். மீசையை முறுக்கிக் கொண்டே அவர் சொன்னர் நாங்கள் தேவர்குலம்; என்னுடைய மீசையைப் பார்த்தாலே தெரியவில்லையா?

நான் சொன்னேன் நண்பா அதிராம்பட்டின சேற்றுக்குள் நான் சிக்கிய போது உனது வீரத்தைக் காட்டும் அந்தமீசை துடிக்க வில்லையே! நண்பா மீசைக்கும் சேற்றுக்கும் தொடர்பு இல்லை; விடு கதையை.

பட்டுக்கோட்டையில் இருந்து வேதாரணியம் நோக்கி நாம் புறப்பட்டோம்.

வேதாரணியம் பஸ் ஸ்டாண்ட் அருகே வேதாரணியம் கோயில் இருக்கின்றது அந்த இடத்தில் இறங்கிக் கோயிலை நாம் அடைந்தோம்!

வேதாரணியம் திருக்கோயில் பல நூற்றாண்டுகள் பழமை கொண்டது. சம்பந்தரால் பாடப்பெற்ற திருத்தலம், யாழ்ப்பாணத்தில் வரணி மக்களால் கட்டப் பெற்ற மடம் இங்கு உண்டு. கோயிலுக்கு உள்ளே பெரிய குளம் ஒன்று இருக்கின்றது. அந்தக் குளத்தில் நான் ஒரு நீச்சல் போட்டேன்! ஆரோகரா என்று சொல்லி வீதிவலம் வந்தேன் எனது அலுப்புஎல்லாம் எங்கே போனது என்றே தெரியவில்லை.

வேதாரணியம் கோயிலிலே எமது அன்றைய பொழுது கழிந்தது.

ஊரை ஓரளவு சுற்றிப் பார்த்தபின்பு வேதாரணியம் அகதி முகாமில் சேர்ந்து விடு என்ருர் தம்பிக்கோட்டையார்! அகதி ஆவதற்குமுன்பு அன்னை வேளாங்கண்ணி ஆலயத்திற்கு நாம் செல்ல வேண்டும். மறுபடியும் எனது விருப்பம் நிறைவேறியது. அன்னை வேளாங்கண்ணியின் ஆலயத்தின் அழகே அழகு. ஆர்ப்பரிக்கும் கடல் ஒருபக்கம், ஆலயம் மறுபக்கம், ஆலயத்தின் பின்புறத்தே இயேசுவின் வாழ்வினைச் சித்திரிக்கும் கல் ஓவியங்கள் ஒரு பக்கம். உலகின் எப்பகுதியிலிருந்தும் குவிந்து கிடக்கும் உல்லாசப் பிரயாணிகள் மறுபக்கம் எதனை ரசிப்பது? எதனை விடுவது?

மலையாளத்தில் இருந்து வந்து ஆலயவீதிகளில் தோசை சுட்டு விற்கும் பெண்களைப் பார்த்த போது பருத்தித்துறை ஞாபகமே எனக்கு வந்தது. எல்லாவற்றுக்கும் மேலாக வீதிகளிலே ஆலயத்துக்கு அன்பளிப்புச் செய்வதற்காக தென்னம்பிள்ளைகள் விற்கின்றனர்கள். அந்தப் பிள்ளைகளின் பெயர் யாழ்ப்பாணத்துத் தென்னம்பிள்ளை. நான் ஒரு யாழ்ப்பாணத்தான்என்று நினைத்தபோது என் உடம்பு எல்லாம் புல்லரித்தது.

அன்னை வேளாங்கண்ணி ஆலயத்திலிருந்து வேதாரணியம் அகதி முகாமுக்குச் சென்று அகதிஅந்தஸ்து கேட்டேன்! அப்போது அங்கிருந்த அதிகாரி சொன்னர் பாஸ்போட் இல்லாம..... கள்ளத்தனமா வந்து இங்கை அகதிஅந்தஸ்து பெற இயலாதப்பா...... நீங்க மட்றுஸ்போயி...... சமூகநல அமைச்சர் திருமதி கோமதி சுவாமிநாதனைக் கண்டால் தான் அகதிஅந்தஸ்து உங்களுக்குக் கிடைக்கும். அதும்பெரிசா இல்லே. இரண்டு கிழமைக்கு 52 ரூபா...... நீங்கநேரே மட்றுஸிலஅமைச்சரைச் சந்தித்து ஒரு சேர்ட்டிபிக்கட் வாங்கி இந்தண்டை வராமல் திருச்சிக்குபோனு கொட்டப்பட்டி அகதிமுகாம் ஒண்ணு இருக்கு அங்கே போயிருங்க.

[தொடரும்]

## 'பாணபத்திரன்'

---

குறுங்காவியம்

# மறுபடி தர்மம் வெல்லும்

**வாகரைவாணன்**

[2]

பத்து நாள்யுத்தந் தன்னில்
பாண்டவ வீரரெல்லாம்
கத்தினர் துயரத்தாலே
கருணையே இல்லாப் பீஷ்மர்
கொத்தினர் மீனைப்போல
கோமளக் கண்ணன் சொன்ன
புத்தியின் வழியில் தானே
போரினில் தோற்றுப் போனன்.

ஆடிய போரில் அன்று
அரிச்சுனன் முன்னல் நின்று
பேடியே எதிர்ப்பான் முன்பு
பெண்ணவன் ஆனதாலே
நீடிய வில்லை வீசி
நெடுந்தவம் செய்யலானர்
மூடிய கண்களோடு
முனியெனத் திகழும் பீஷ்மர்.

ஏற்றதோர் தருணம் என்றே
ஈடிலா விஜயன் எண்ணி
காற்றது சுழலல் போல
கணையதை விடுக்குங்காலை
ஆற்றலில் இணையே இல்லா
அழகுள சங்கா மைந்தன்
தோற்றனன் இல்லைப் போரில்
சூழ்ச்சியில் வீழ்ந்தா னம்மா.

பற்பல சாபத்தாலே
பலமது மிக்க கன்னன்
அற்பனைப் போலும் மாண்டான்
அரிச்சுனன் கையின் அம்பால்
கற்பனைக் கெட்டா வீரம்
கருணையே விளையும் நெஞ்சம்
அற்புத மனிதன் தன்னை
அழித்தவர் யாருமில்லை.

தனையனும் மாண்டான் என்று
தருமரே பொய்யைக் கூற
கணையுடன் வில்லும் வீழ
கலையதில் வல்ல துரோணர்
முனையதில் மயங்கிப் போவார்
மூர்க்கனும் துட்டத் துய்மன்
தனைஒரு வீரன் எனறே
தன்குரு தலையைக் கொய்வான்.

நன்றியே மறவா வீரர்
நல்லவர் பெரியோர் எல்லாம்
ஒன்றினர் மரணத்தோடு
ஒருபெருங் கடனைத் தீர்த்தார்
கன்றினன் துரியன் உள்ளம்
கதறினன் பசுவைப் போல
நின்றனன் அநாதையாக
நெருங்கிடும் இறுதிப் போரே.

நாதியே இல்லான் போல
நட்டதோர் கல்லைப் போல
பாதியே இளைத்தான் போல
பலமெல்லாம் இழந்தான் போல
பீதியே நிறைந்தான் போல
பெருங்கடல் வீழ்ந்தான் போல
வீதியில் நின்றான் வந்து
விரோதியே உருகப் போவான்.

துரியனைத் தேடிக் கொண்டு
துயரமே வடிவமாக
கிருபரும் வருவாரங்கு
கிழவரின் உள்ளம் எல்லாம்
உருகிடும் மெழுகைப் போல
உதிரமும் கொதிக்கச் சொல்வார்
அரும்பெரும் உயிர்களெல்லாம்
அழியவா யுத்தம் செய்தோம்?

போரது நிகழ்வ தாலே
புவியிது பெற்றதென்ன?
ஊரெல்லாம் விதவைப் பெண்கள்
ஊனமே ஆனமக்கள்
ஆரெது சொன்ன போதும்
அமைதியைத் தேட வேண்டும்
வேரது விட்டுப்போன
விரோதத்தைக் களைய வேண்டும்.

பெரும்படை வகுத்த போதும்
பீஷ்மரே எதிர்த்த போதும்
தருமமே வென்ற தின்று
தான்எனும் அகந்தையாலே
ஒருபெரும் யுத்தஞ் செய்து
உலகையே அழித்துவிட்டாய்
வருபலன் ஏதுமில்லை
வையமே தூற்றும் உன்னை.

[தொடரும்]

---

## இதிகாசக்கதை

# நீதியும் பாசமும்

**தி. பொன்னம்பலவாணர்**

நீதிக்குப் பின் பாசமா? பாசத்திற்குப் பின் நீதியா? என்னும் இரு கேள்விகள் மனிதசமூகத்தில் ஏற்படுவது வழமை. இக்கேள்விகளுக்குச் சுலபமான பதில்களைக் கண்டு பிடிக்க நீதி பாசத்துக்கு விரோதமாக இருக்குமா? பாசம் நீதிக்கு விரோதமாக இருக்கவேண்டுமா? என்னும் கேள்விகளைக் கேட்டுப்பார்க்கலாம்!

சிலருக்கு சில சந்தர்ப்பங்களில் நீதியை முன்னிட்டுப் பாசத்தினை அலட்சியம் பண்ணுவதே நீதியாயிருக்கும்; ஆனல் சிலருக்குப்பாசததுக்கு முதன்மை கொடுப்பதே நீதியாய் இருக்கும்.

இப்படி வாழ்வில் ஏற்படும் சிக்கல்களை இனம்கண்டு நீதியாய் வாழ வழி காட்டுவனவாக இராமயாண பாத்திரங்கள் இரண்டு அமைந்துள்ளன. விபீஷணன், கும்பகர்ணன் என்பனவே இப்பாத்திரங்களாகும்.

நீதிக்குப்பின் பாசம் என்பது விபீஷணனுக்கு பொருந்தும் அதேவேளை பாசம் ஒன்றையே கவனிக்கவேண்டிய வாழ்வாகக் கும்பகர்ணன் வாழ்வு அமைந்தது.

இராவணனுடைய சோற்றிலே வாழும் வாழ்வை உடைய கும்பகருணன் தான் உண்டுவாழ்ந்த சோற்றினை நினைக்க வேண்டியவனுயிருந்தான். இராவணன் தவறும் போது சுட்டிக்காட்டும் சகோதர உரிமை கும்பகர்ணனுக்கு இருந்ததேயன்றி விட்டுவிலகும் உரிமை இருக்கவில்லை ஆனல் தன் கடமைகள் எதனையும் தானே கவனிக்கும் ஆற்றலும் அறிவும் ஒழுக்கமும் உடையவனுயிருந்த விபீஷணன் இராவணன் தவறுவதைச் சுட்டிக்காட்டும் உரிமையோடு: இராவணன் தன் செயல்தான் சரியென 'தான்பிடித்த முயலுக்கு மூன்றுகால்'தான் என வாதிடும் வேளையில் அவன் கருத்தில் உள்ள தவறுக்காக அவனையே ஒதுக்கி வாழும் உரிமையையும்கூடவிபீஷணன் பெற்றிருந்தான்! இராவணனுடைய பதவி—மூபபு—ஆற்றல் எல்லாவற்றையும் கௌரவித்து ஏற்கும் பண்பில் விபீஷணன் இராவணனைச் சார்ந்து வாழ்ந்தானேயன்றி இராவணன் உதவியின்றியும் வாழத்தக்க தகுதிகளுடன் இருந்தான். ஆனல் உண்பதும் உறங்குவதுமே வாழ்வின் பெரும் பகுதியாகக் கொண்ட கும்பகர்ணன் வழ்வோ இராவணன் தனக்குக் கொடுத்த சோற்றுக்கு நன்றியுடன் இருக்கவேண்டிய கடமை உடையதாய்-கடமையைக் கவனிப்பதே நீதியாய் இருந்தது. செஞ்சோற்றுக் கடன் என்ற கடமை விபீஷணனுக்கு இருக்கவில்லை. அந்தசமயம் இராவணனின் பிறன்மனைநயத்தலாகிய நீதியீனத்துக்கு உதவுவது இராவணனைக் கெடுப்பது மட்டுமன்றி பிறன்மனை நயத்தலுக்கும் தன் குடும்ப அழிவுக்கும் உதவுவதாய் அமையும் என்ற தன்மையே இருந்தது. இந்த அடிப்படைகள் கும்பகர்ணனுக்கும் இருந்தனவென்றாலும் இவற்றைப்பற்றிச் சிந்திப்பதற்கு முன் செஞ்சோற்றுக் கடமையை நிறைவேற்றவேண்டிய அவசியம் இருந்தது. செஞ்சோற்றுக் கடன் தீர்க்கவேண்டிய நிலையில் இருந்த கும்பகர்ணனுக்கு பாசத்தைப் பேணுவதே நீதியாயிருந்தது. நீதி

[8-ம் பக்கம் பார்க்க]

# கார்ட்டூன் ஓவிய உலகில் நான்

[5]

எமது பெற்ருேர்பிள்ளையின் உடலைப் போஷாக்குச் சத்துள்ள உணவு கொடுத்துப் போஷித்து வளர்ப்பதுபோல் பிள்ளையின் உணர்வைப் போஷித்து வளர்ப்பதில்லை. ஒரு வியாபாரி நன்ருக விற்பனையாகும் பொருளைப் பணம் கொடுத்து வாங்கி விற்பனை செய்வது போல் பெற்ருேரும் கல்யாணச் சந்தையில் மதிப்புள்ள உத்தியோகத்திற்கே பணத்தைச் செலவிடுகின்றனர். பிள்ளையை வளர்த்து விவாகம் செய்து வைப்பதும் ஒரு வியாபாரமாக மாறிவிட்டது இந்த வியாபாரத்திற்கு கல்வியும் உறுதுணையாக இருக்கிறது. ரியூட்டரிகளும் உரமிடுகின்றன. உத்தியோகத்தை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளாகவே எமது கல்வி நிலையங்கள் செயற்படுகின்றன. பூரண மனிதனை உருவாக்குவது அவைகளின் இலட்சியமாக இல்லை.

எமது சமுதாயம் பிள்ளைகளின் உணர்வுகளுக்கு மதிப்புக் கொடுப்பதே இல்லை. சமுதாயத்தைப் பிள்ளைகளின் உணர்வுகள் குழிதோண்டிப் புதைக்கப்படும் இடுகாடென்றே கூறவேண்டும்.

### எமது சமுதாயமும் கலைப்பற்றும்

இருந்தும் எமது சமுதாயத்திற்கு முற்ருகக் கலைப்பற்று இல்லையென்றே கூற முடியாது அந்தப் பற்றினை அழகிரிசாமி ஒரு சிறுகதை மூலம் துலக்குகின்ருர்.

அந்த இளைஞன் சங்கீத ஞானம் மிக்கவன், அவனின் சங்கீத ஞான ரசத்தை சுவைத்து வருகின்ருர் ஒரு செல்வந்தர். அந்த இளம் இசைஞனின் இசைக் கச்சேரி இந்தியாவில் எங்கு நடைபெற்ருலும் அங்கு பிரசன்னமாகி 'சபாஷ்' போட்டு பேரானந்தத்தில் திளைப்பார், அந்த இசை மேதையை அவர் பாராட்டிப் பேசாத கூட்டங்களில்லை. அவரின் பெரிய புகைப்படத்தையும் வீட்டில் மாட்டி அவரைப் போற்றினுர். இளம் கலைஞனுக்கு செல்வந்தனின் மகளில் காதல் ஜனித்தது. சம்பந்தத்திற்கும் செல்வந்தனிடம் சம்மதம் கோரப்படுகின்றது. இளம் வித்துவானின் பரம ரசிகனுகிய செல்வந்தன் 'சீ... ஒரு சங்கீத காரனுக்கா எனது மகளை மணம் செய்து கொடுப்பதென்று விஷம் உமிழ்கின்ருர்.

இந்தச் சிறுகதை எமது போலிக் கலைப்பற்றை துலாம்பரமாகத் துலக்குகின்றது.

### அறியார் முன் கலைஞானம்

எமது மண்ணில் இசைபயிலும் பெண்களின் தலைவிதியும் அந்த இளம் வித்துவானைப் போன்றதுதான். ஒரு பெண் சிறுவயதிலிருந்தே வீணை கற்று வருகின்ருள். வயதும் வீணைக் கலையும் வளர்கின்றன. தனக்கு வரப்போகும் பிரிய மணுளன் சண்முகப்பிரியாவை ரசிப்பானு அல்லது கல்யாணியை ரசிப்பானு, இல்லை சிந்து பைரவியை ரசிப்பானு என்றெல்லாம் எண்ணி வியர்வை சிந்தி ராகங்கள் சாதகம் பண்ணுகின்ருள் திருமணமும் நிறைவேறுகின்றது. மணமகனை மகிழ்விக்க வீணையை அவன் முன் தூக்கிவந்து வைத்து 'உங்களுக்கு காம்போதி பிடிக்குமா அல்லது கல்யாணி பிடிக்குமா' என்றுகேட்கின்ருள். ''எனக்கு கல்யாணி தெரியாது கல்யாணம்தான் தெரியும்'' எனப் பெரும் நகைச்சுவையை கூறியதுபோல் சிரிகின்ருன். தனது கலைக்கோட்டை கண்ணிவெடியில் தகர்ந்தது போல் மனம் உடைகின்ருள். அத்துடன் அவளின் வீணை வீட்டின்மூலையில் வைக்கப்படுகின்றது. அதைமூடித்தூசிவளர்கின்றது: அவளின் கலைப்பற்றும்தேய்ந்து மறைகின்றது.

மகளை வாழவைப்பதற்கு பெரும்தொகை சீதனம் அள்ளிக் கொடுப்பவர்கள் திருமணத்தின்போது ஒரு இசைக் கச்சேரிவைத்து பணம் கொடுத்து இசையையும் இசைஞர்களையும் வாழவைக்கும் பண்பு எம்மிடமில்லை. தாலி கட்டும்போது கெட்டிமேளம் கொட்டவேணுமென்னும் சம்பிரகாயத்திற்காகவே மங்கல இசைஞர்களை திருமண வீடுகளுக்கு அழைக்கின்ருர்கள். பலமேடைகளில் பரத நாட்டியத்தின் எழில்பரப்பிய நர்த்தகிகள்கூட திருமண மேடையைக் கண்டபின்பு பரதநாட்டியத்திற்கு ''டாட்டா'' கூறிவிடுகின்றனர். முத்தான முத்திரைகள் பிடித்தவிரல்கள் நித்திரை செய்கின்றனவே என்று எண்ண வேதனையாகவே இருக்கின்றது.

## சிரித்திரன் சிவஞானசுந்தரம்

### கலையைக் கிண்டாது பயிரைக் கிண்டினர்

இப்படியாகக் கலைக்குமதிப்பு வழங்கப்படாத சூழலில் தமிழ் சஞ்சிகைகளும் சங்கீத விதத்துவான்களை கார்ட்டூன்களால் கேலிசெய்தவண்ணமே இருக்கின்றன. தமிழ் சஞ்சிகைகள் இசைக்கலையை வளர்ப்பதற்கு நிறைய அச்சுமை இறைத்திருக்கின்றனர். அதேசமயம் ''இந்தியன மையால்'' சங்கீத வித்துவான்களின் முகத்திலும் கரிபூசவும் தவறவில்லை. தமிழ் சஞ்சிகைகள் ஆரம்பித்த காலம் தொடக்கம் இன்றுவரை சஞ்சிகைகளை ஒரு ஆய்வுக் கண்ணேட்டத்துடன் பார்த்தால் கூடுதலானகார்ட்டூன்கள் இசைஞரை கேலி செய்தனவாகவே அமைந்துள்ளன. கார்ட்டூன் எனுங்கிண்டல்கலை சமுதாயத்தில்உள்ள களையைக் கிண்டிஎடுப்பதற்கேயல்லாது பயிரைக் கிண்டி எடுப்பதற்கல்ல.

### இசைப் போற்றும் எனது பணி

நான் இசைப்பற்றைவளர்ப்பதற்கு என்னுல்செய்யக்கூடிய பணியைச் செய்து கொண்டிருக்கின்றேன் என எண்ணும்போது ஒருமனநிறைவு ஏற்படுகின்றது. ஓரிரு கார்ட்டூன்களை எடுத்துக்கூறுவது பொருத்தமாக இருக்குமென எண்ணுகின்றேன்.

### கிட்டப்பா பாடல்

சவாரித்தம்பரின்மனைவி, சின்னக்குட்டி அண்ணரை இரண்டு முட்டைகள் கடையில் வாங்குவதற்கு அனுப்புகின்ருர் சின்னக்குட்டி அண்ணரோ வெகுநேரம்சழித்து இருமுட்டைக் கோதுகளுடன் வருகின்ருர். இதைக்கண்டு வெகுண்டெழுந்த சவாரித்தம்பர் மனைவி ''அறுவான்...... முட்டைக் கோது வாங்குவதற்காகவா உன்னைக் கடைக்கு அனுப்பினேன்'' என அயல் அதிர ஆத்திரங்கொண்டு பேசுகின்ருர். சின்னக்குட்டியோ அமைதியாக நின்றுவிட்டு ''அக்கா கிட்டப்பா ஐயரின் பாட்டு ரேடியோவில் பாடிச்சுது... மெய்மறந்து கையிலிருந்த முட்டையால் தாளம் போட்டன்..... உடைஞ்சு போச்சு..... அதுவெல்லோ பாட்டு'' என்ருர்.

[தொடரும்]

---

ஈழத்துத் தமிழ்க்கவிதை வளமும் வரலாறும் — 2

# சரசோதிமாலை முதல் வரலாற்றுத் தொடர்ச்சி

மேற்குறித்த சாசனப் பாடல்களில் 'போதிநிழல மர்ந்த...'' எனத்தொடங்கும் முதலாவது பாடல் வணிககணம் ஒன்றுபௌத்தவிகாரை எடுப்பித்தமை பற்றிய சாசனத்தில் இடம் பெற்றது. இதிலே தர்மபாலன் என்ற பெயருடைய பௌத்த பெரியாரின் பெருமை பேசப்படுகின்றது. ''சங்கணம் வேற் கண்ணிணையால்..'' எனத் தொடங்கும் 'கோட்டகம்'ப் பாடல் யாழ்ப்பாணத்தின் சிங்கையாரிய மன்னனெருவன் சேகாலை மாவட்டம் வரை படையெடுத்துச் சென்று பெற்ற வெற்றிப் பெருமை பேசப்படுகிறது. பதவியாச் சாசனப் பாடல் அங்கிருந்த ஒரு இந்துக்கோயிலைப்பற்றிக் குறிப்படுவதாக உள்ளது. பண்டுவஸ்நுவரப் பாடலில் பௌத்த நிறுவனங்கள் சில நிறுவப்பட்டது பற்றிய செய்திகள் உள. யாப்புநிலையிலே அநுராதபுரப் பாடலும்கோட்கமப்பாடலும் செப்பமான அமைப்பில்உள்ளன. தமிழ்ப் புலமைத்திறனின் 'உரைகல்' எனப்படும் பெருமைமிக்க வெண்பாயாப்பிலே நேரிசை வெண்பாக்களாகஅமைந்தஇப் பாடல்கள் ஈழத்தில் கி பி 9ம், 14ம் நூற்றுண்டுகளுக்கிடைப்பட்ட காலடபகுதியிலேதகைசால் புலமை மரபு பேணப் பட்டிருந்தமையை உறுதிசெய்வன. ஆயின் அவ்விடைக் கால ஆக்கங்களாக எவையும் எமக்கு இற்றைவரை கிடைக்காமைக்கு அவை முறையாகப் பேணப்படாமை முக்கியகாரணமாகலாம்.

## கலாநிதி நா. சுப்பிரமணியன்

### வரலாற்றுத் தொடர்ச்சி

1310இல் தம்பதேனியாவில் எழுந்த சரசோதிமாலையைத் தொடர்ந்து இற்றைவரை ஈழத்துத் தமிழ்க்கவிதைக்கு ஒரு வரலாற்றுத் தொடர்ச்சி காணப்படுகின்றது. இவ்வரலாற்றை அரசியற் பின்னணியைக் கருத்திற்கொண்டு காலகட்டங்களாக வகைப்படுத்தும் மரபே ஈழத்து இலக்கிய வரலாற்ருய்வாளர் மத்தியில் பெரும்பான்மையாக நிலவுகிறது. கலாநிதி ஆ. சதாசிவம் அவர்கள் தமது ஈழத்துத் தமிழ்க் கவிதைக்களஞ்சியம் [1966] நூலிலே,

யாழ்ப்பாணத் தமிழ் வேந்தர் காலம், 1216—16.1.

போர்த்துக்கேயர் காலம்; 1621—1658.

ஒல்லாந்தர் காலம்; 1658—1796.

ஆங்கிலேயர் காலம்; 1796—194.

தேசிய எழுச்சிக் காலம்; 1948- என்ற காலவகைமையை முன்வைத்தார். வித்துவான் FXC. நடராசா [ஈழத்துத் தமிழ் நூல்வரலாறு 1970], கலாநிதி K S நடராசா [ஈழத்துத்தமிழ் இலக்கிய வளர்ச்சி 1982] ஆகியோரும் இவ்வகைமையையே பெரிதும் தழுவினர். எனினும் யாழ்ப்பாணத் தமிழ்வேந்தர் காலம் என்பதனை ஆரியச்சக்கரவர்த்திகள் காலம் எனப் பெயர்மாற்றம் செய்தனர். திரு. சி தில்லைநாதன் அவர்கள் 17ம் நூற்றுண்டு முதல் ஈழம் சுதந்திரம்பெற்ற 1948ம் ஆண்டுவரையான காலப்பகுதியைப் பொதுவாக ஐரோப்பியர் காலம் எனக் கொள்கிருர். [நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாடு நினைவுமலர். 1974. ப. 78] இவரும் யாழ்ப்பாணத் தமிழ் வேந்தர் காலத்தை ஆரியச் சக்கரவர்த்திகள்காலம்என்றே குறிக்கிருர். கலாநிதி கா. சிவத்தம்பி அவர்களது பகுப்பு முறையிலும் [ஈழத்தில் தமிழ் இலக்கியம். 1978] யாழ்ப்பாணத் தமிழ்வேந்தர் காலம் என்றபகுதி ஆரியச்சக்கரவர்த்திகள் காலம் என்றே குறிக்கப்பட்டுள்ளது. கலாநிதி பொ. பூலோகசிங்கம் அவர்கள் [நான்காவது அனைத்துலகத்தமிழாராய்ச்சி மாநாட்டு நினைவுமலர் 1974] கி பி.பதினெட்டாம் நூற்றுண்டுவரையான இலக்கியவரலாற்றை தொகுத்து நோக்கி பத்தொன்பதாம் நூற்றுண்டைத் தனியொருகாலப் பகுதியாக ஆராய்கிருர்.

### ஆரியச்சக்கரவர்த்திகள் காலம்

யாழ்ப்பாணத் தமிழ்வேந்தர் காலம் எனப்படும் ஆரியச்சக்கரவர்த்திகள் காலப் பகுதியில் எழுந்தனவாகப் பதின்மூன்று நூல்கள்அறியப் படுகின்றன. அவை;

சரசோதிமாலை
செகராசேரசகரம்
செகராசசேகரமாலை
பரராசசேகரம்
தக்ஷிணகைலாசபுராணம்
கண்ணகிவழக்குரை
இரகுவம்மிசம்
வையாபாடல்
கோணேசர்கல்வெட்டு
கைலாயமாலை
வியாக்கிரபாதபுராணம்
திருக்கரைசைப்புராணம்
கதிரமலைப்பள்ளு

இவற்றில் முதல் நான்கும் சோதிடம், வைத்தியம் ஆகிய துறைகளை விளக்கிநிற்கின்றன. பாட்டு என்ற வடிவநிலையில் மட்டும் அமைந்துள்ளஇவ்வறிவுத்துறை நூல்களைக் கவிதை இலக்கியமாகக் கொள்வதற்கில்லை. ஏனைய ஒன்பது நூல்களுமே கவிதைகளாக நோக்குதற்குரியன. இவற்றுட்சில காப்பியம், புராணம் ஆகிய பேரிலக்கிய வகைகளில் அமைய ஏனையவை சிற்றிலக்கிய வகைசார்ந்தவை. கண்ணகிவழக்குரை, இரகுவம்மிசம் என்பன காப்பியங்கள். தக்ஷிணகைலாசபுராணம், வியாக்கிரபாதபுராணம். திருக்கரைசைப்புராணம் என்பன புராணங்கள். ஏனைய நான்கும் முறையே பாடல், கல்வெட்டு, மாலை, பள்ளு ஆகிய சிற்றிலக்கியவகைகளில் அமைந்தவையாகும்.

### ஈழத்தின் முதற் காப்பியங்கள்

ஈழத்திலே தமிழில் எழுந்த முதற்காப்பியங்கள் என்ற பெருமை கண்ணகிவழக்குரைக்கும் இரகுவமிசத்திற்கும் உரியது. கண்ணகி வழக்குரை எழுந்த காலம் பொதுவாக ஆரியச்சக்கரவர்த்திகள் ஆண்டகாலம் எனக் கொள்ளப்படுகிறதேதவிரத் திட்டவட்டமாக நிறுவப்பட்டிலது. அதனை இயற்றியவரின் பெயர் 'சகவீரன்' என்பதும் அவன் 'காங்கேசன் தேவையர்கோன் தவமென்ன விளங்கு புகழ்,

[8ம் பக்கம் பார்க்க]

---

# மகளிர் பற்றி மகாத்மா

பெண், மனிதனின் ஒரு தோழியேயாவாள். மனிதனைப்போல சமமூளைத்திறன் பெற்றவளே அவள். மனிதன் பங்கேற்கும் எந்த முயற்சியிலும் சமபங்கு பற்றும் உரிமையுடையவளே பெண் அதனுல் அவள் மனிதனுடன் சமனுன நிலைபெற சுதந்திரம் உண்டு. மனிதனுக்கு இருக்கும் அதே அளவு இடம் அவளுககும் தன் சொந்தச் செயல்வட்டத்தில் மேனிலை வகிக்கத் தகுதியுண்டு. இது கற்பதனுலோ அல்லது எழுதுவதனுலோ ஏற்படும் நிலை அல்லாமல் சாதாரணமாக இயற்கையாகவே காணப்படும் நிலைமைகளால் ஏற்படவேண்டும். அறியாமையும் தகுதியும் அற்ற மனிதன் சமூகத்தில் காணப்படும் தீயபண்பாட்டை சாட்டாக வைத்து பெண்களிலும்பார்க்க உயர் ஸ்தானத்தைப் பெற்று அனுபவிக்கிருன். உண்மையில் இப்படியான நிலைபெற தகுதியோ உரிமையோ இவர்களுக்கு இல்லை. பெண்களின் இந்த நிலையால் எத்தனையோ எமது இயக்கங்கள் அரைவழியில் நின்றுபோகின்றன. இதனுல் எங்கள் அநேக வேலைகள் நல்ல பயனைத்தர தவறிவிடுகின்றன.

பெண் — ஆண் எல்லா விதத்திலும் ஒரே வகையினராய் இல்லாதபோதும் ஆணும் பெண்ணும் அந்தஸ்தில் சமமே. ஒருவருடைய செயலை ஒருவர் பூர்த்தியாக்க உதவும் நிகரற்ற சோடியே இவர்கள். ஒருவருக்கு மற்றவர் உதவி புரிகிருர், இதனுல் ஒருவரில்லாமல் மற்றவர் வாழ்வில் நிலைபெற முடியாது. இருவரில் யாரேனும் ஒருவரின் அந்தஸ்திற்கு ஏதேனும் ஒரு காரணி பங்கம் விளைவித்தால் இருவருடைய நிலையும் பாழ்படும் என்பதை இந்த உண்மைகள் ஐயந்திரிபற உணர்த்துகின்றன.

— பூபால்

## 'கற்பகம்' மார்கழி 86

நம்பிக்கையின் இருப்பிடம் தொல்லைகள் பலகண்டு மனுக்குல இரட்சிப்புக்காகச்சிலுவையில் தம்மைப் பலியாக்கியநல்லாயன் யேசுவின் பிறப்பினை புதியதோர் வடிவமைப்பில் அட்டைப் படமாகக் கொண்டு, வடமாகாண தெ. ப. பொ. கூட்டுறவுச் சங்கங்களின் சமாஜம்மாதந்தோறும் வெளியிடும் 'கற்பகம்' கிடைக்கப்பெற்றோம்.

யாழ்ப்பாண நகரில் சாதாரண அச்சகம் மூலம் தொழில்நுட்பப்புதுமைகளை அறிமுகப்படுத்தும் 'ஸ்வர்ணம் பப்ளிசிடீஸ்' வடிவமைப்புச் செய்திருக்கும் அட்டைப்படத்திற்கு காலச்சூழலினை நினைவிற்கொண்டு கவிதையால் பாலகயேசுவின் பிறப்பினுக்கு விளங்கம் கொடுத்துள்ளார் திரு. ஆ. ந. இராசேந்திரன். வழமைபோல் பனைவளத்தின் தொன்மையின் ஆய்வும், பனைவளத்தின் பொருளியல் நோக்குப் பிரயாணத் தொடரும், கவிதைகள், துணுக்குகள், சிறுகதை, பனையும் புனித விருட்சமாக விளங்குகின்றது என்னும்விளக்கமும் சிறுவர்கதை, உண்மை சுடும்-9 தொடரும், கேள்வி-பதில், சங்கச் செய்திகள் போன்ற பல அம்சங்களை அடக்கியதாக வெளிவந்துள்ளது.

## புதிய புத்தகம்

### 'பூவரசு'

வன்னித் தமிழ் மண்ணின் பாடசாலைகளில் ஒன்றாகவிளங்கும் வவனியா கல்விப் பிரதேசத்திலுள்ள பூவரசங்குளம் மகாவித்தியாலயத்தின் மூன்றாவது வெளியீடாக 'பூவரசு' ஆண்டுமலர் வெளிவந்துள்ளது. இந்த மகாவித்தியாலயம் கடந்த இரு ஆண்டுகளிலும் 'முல்லை' என்றபெயரில் வெளியிட்டுவந்த ஆண்டு மலர்களின் வரிசையில் இவ்வாண்டு 'பூவரசு' வெளிவந்துள்ளது.

தமிழ் மண்ணில் அசாதாரண சூழல் நிலைகொண்டுள்ளதால் கல்வித்துறைபேணப்படுவது அவசியம். கல்வியே எம்மவரின் மூலவளம் என்பது வளமிகு வன்னியிலும் உறுதிப்பாடு அடைந்துள்ளமைக்கு எடுத்துக் காட்டாகவே பூவரசு ஆண்டுமலர் விளங்குகின்றது.

'தொழில் பிரிவு', 'தமிழ் இலக்கியம் கண்ட அரசு', 'இசையின் பொருமை', 'இலங்கையின் வருமானப்பங்கீட்டமைப்பும் பொருளாதார அபிவிருத்தியும்', 'இந்துக் கோயில்களின் தோற்றம் வளர்ச்சி' என்னும் ஆய்வுக் கட்டுரைகளும் வித்தியாலய மாணவ, மாணவிகளின் தமிழ் ஆங்கிலப் படைப்புக்களும் வித்தியாலயத்தின் 1985ன் முக்கிய நிகழ்வுக்குறிப்புகளும் 1986ன் பாடசாலைக் கழகங்களின் விபரங்களும் இன்னும் பிறதகவல்களும் இம்மலரில் இடம்பெற்றுள்ளன.

## நீதியும் பாசமும்

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

நெறியில் வாழும் வாழ்வை ஏற்கனவே சிந்திக்காதிருந்த கும்பகர்ணன், இராவணனின் பாசத்தால் வாழ்ந்த கும்பகர்ணன் பாசத்துக்கு நன்றி செய்தான்.

நீதி வழுவா நெறிமுறையில் வாழ்ந்த விபீஷணன் நீதியான தன்வர்ழ்வின் பயனாக இராமனுக்கு (கடவுளுக்கு) உடன் பிறப்பானான். கும்பகர்ணனோ கடமையை நிறைவேற்றிய சிறப்பைப் பெற்றான்.

கும்பகர்ணனுக்கு உரியசெஞ்சோற்றுக் கடனும் இல்லாமல் விபீஷணனுக்கு உரிய நீதியுமில்லாமல் இருப்பதும் நீதியை வாழ்வில் ஒருசிறிதும் பேணாதவர் நீதிக்காகப் பாசத்தை விடுவதோ சுயநலத்துக்காகப் பாசத்தை பேணுதவர் பாசத்துக்காக நீதியை அலட்சியம் செய்வதும் புகழத்தக்கன வல்ல என்பதையும் இவ்விரு பாத்திரங்கள் மூலம் இராமாயணம் போதிக்கின்றது என்று விளங்கிக் கொள்ளும்போது நம் வாழ்வு வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதாய் அமையும்.

## தொடர் நவீனம்

[5-ம் பக்கத் தொடர்ச்சி]

அதன் பின் வழமை பெரிதும் மாறிவிட்டது

கனகசபை தேநீரைப் பருகும்போதுதூரத்தில்கார்ஒன்று வருவது தெரிந்தது. கறுப்பு நிற மொறிஸ் மைனர். அதன் சிவப்பிலக்கம் காலை வெயிலில் தெளிவாகத் தெரிந்தது.

''உது துரையன்ர கார்... ரக்சி..'' என்றார் மாணிக்க வாசகர்.

''அவன் ஏ போர்ட்டியெல்லோவைச்சிருந்தவன்...''

''அதை வித்துப்போட்டு இதை வாங்கியிருக்கிறான்.''

வேகமாக விரைந்து வந்த கார் அவனுக்கருகில்நின்றது

''கனகு...'' என்று ஆவலோடு அழைத்தபடி, துரை காரை விட்டிறங்கி ஓடிவந்தான் அவனுடைய முகத்தில் நண்பனைச் சந்தித்த மகிழ்ச்சி தெரிந்தது. கனகசபையின் கரங்களைப் பிடித்தபடி சில பொழுது எதுவும் பேசாது மௌனமாக நின்றிருந்தான்.

''வீட்டிற்குத் தானே... நீ வாறதாக ஒருத்தரும் சொல்லவில்லை...''

''வீட்டிற்குக்கூட நான் எழுதவில்லை. திடீரெனவந்து எல்லாரையும் வியப்பில் ஆழ்த்த எண்ணினன்... நீ எப்படி மச்சான் இருக்கிறாய்? உன்னை அங்க வரச்சொல்லி எவ்வளவு எழுதினன். மறுத்திட்டாய்...''

''காரணம் உனக்குத் தெரியும்... வா... வா...'' என்றபடி சூட்கேசுகளைத் தூக்கி கார் கரியரில் வைத்தான். றவலிங் பாக்குகளை எடுத்து டிக்கியில் திணித்தான். பெட்டிகளைப் பின் சீற்றில் போட்டான்.

''வா... போவம்...'' முன் கதவைத்திறந்துவிட்டான்.

''அண்ணை வாறன்...'' என்றபடி கனகசபை காரில் ஏறிக் கொண்டான்.

''நேரம் கிடைத்தால் ஒருக்கா வீட்டுப்பக்கம் வா தம்பி...''

கார் விரைந்தது. ஒரு குழந்தையின் ஆவலோடுகனகசபை வெளியே பார்த்தான். தான் அலைந்து திரிந்த வீதிகள், இடங்கள் அவனுக்கு பழைய பல நினைவுகளைத் தோற்றுவித்தன. கலட்டியில் கார் திரும்பியபோது, மண் ஒழுங்கை தார் வீதியாக மாறியிருப்பதைக் கவனித்தான். வீதியருகில் மின்கம்பங்கள் நாட்டப்பட்டு, கிராமத்திற்கு மின்சாரம் வழங்கப்பட்டிருப்பதையும் கண்டான்.

ஆலடி வயிரவர் முன்னர் சிறியதொரு கோயில் மண்டபத்தில் இருந்தார். இப்போது பெரியதொரு கர்ப்பக்கிரகமும் முன்மண்டபமும் கொண்ட கட்டிடத்தில் குடியேறியிருந்தார். கோயிலுக்கு அருகில் இருந்த வாசிகசாலை அப்படியே இருந்தபோதிலும், வெள்ளையடிக்கப்பட்டு புதுப்பொலிவோடு காணப்பட்டது.

ஒரு பெரிய வீட்டின் முன் கார் வந்து நின்றது.

''இறங்கு...'' என்றான் துரை: ''உன்ரை வீடு...''

வியப்புடன் கனகசபை விழித்தான். சிறு குடிசையாக மழைக்கும் வெயிலுக்கும் ஈடு கொடுக்கமுடியாது நின்றிருந்த மண்குடிசை, இன்று மாளிகையாக உயர்ந்து நிற்பதை அவனால் சிலகணங்கள் நம்பமுடியவில்லை.

[தொடரும்]

(7ம் பக்கத் தொடர்ச்சி)

உடையவன் என்பதும் மாதவி அரங்கேற்று காதைப்பாடலொன்றில் [9] கூறப்பட்டுள்ளது தேவையர்கோன் என்பது யாழ்ப்பாணத்தில் அரசோச்சிய ஆரியச்சக்கரவர்த்திகளைக் குறிச்கும் பெயராகும். இந்நூலில் வேறு ஒருபாடல் [7:11] ஆரியச்சக்கரவர்த்திகளைப் புகழ்வதாக உளது.

## 'நான்' உளவியல் மஞ்சரி— இதழ்: 6

இன்று தமிழில்எம்பிரதேசத்திலிருந்து வெளிவரும் உளவியல்மஞ்சரியான 'நான்'கார்த்திகை—மார்கழி 86 வெளிவந்துள்ளது. சங்கீதம் உடல்-உளம்; கலாநிதி மௌனகுரு, உளவியல் மருத்திவங்கள்; வண. பிதா எஸ்.டேமியன், ஆனந்தியின் புதுவீடு; தொடர்சதையின் இறுதிஅங்கமும் உளவியலாளர் வரிசையில்... அடொல்வ் மேயர்; ஜீ எம். செபஸ்ரியாப்பிள்ளை, வேதாளம் சொன்னகதை; செம்பியன் செல்வன், உணர்வுப் பாதையில் மனிதமாண்பு; ஜீவனதாஸ் பெர்ணாண்டோ, செல்வி மரீனா அந்தோனிப்பிள்ளையின் நீர்க்கோலங்கள் என்ற சிறுகதை, உளவியல் கல்வி- சருத்துக் குவியல் மற்றும் கவிதைகள், குறுக்கெழுத்துப்போட்டி 29, பேனாநண்பர் பகுதி மற்றும்பல அம்சங்களை அடக்கியதாக இந்த மஞ்சரி அமைந்துள்ளமை மிகப்பயன் உள்ளதாகும்.

— க. அருளானந்தன்.

## திருத்தொண்டர் புராணம்

### மாணவர்களுக்கான வினாவிடை

தொல்லிப்பழை-பாலர் ஞானோதயசபையின் பழைய மாணவர் சங்கவெளியீடாக வெளிவந்த பெரியபுராண வசனச் சுருக்க நூலின் விளக்கமான அறிவை சைவமாணவர் அறிந்து பயன்பெறும்வகையில் பாலர் ஞானோதய சபையின் வெளியீடாக 'திருத்தொண்டர்புராணம்; வினா-விடை' என்றநூல் வெளிவந்துள்ளது. சைவவாழ்வும் ஒழுங்கும் அது கூறும் கடவுள் நெறியும் நடைமுறை வாழ்வுக்குரியனவே. அந்நியர் ஆதிக்கம் நிலைகொண்ட தமிழகத்தில் தமிழினத்தின் தனித்துவம் பேணிச் சைவநெறியில் வாழ்ந்து காட்டியவர்களே திருத்தொண்டர் புராணநாயகர்கள்.

நம்பியாண்டார்நம்பி முகலாக சேக்கிழார் நாயனார்ஈறுகவுள்ள திருத்தொண்டர் பொருமை சைவமதத்தின் இளந்தலைமுறையினர் அறிந்துகொள்வது மட்டுமின்றி நினைவில் நிறுத்தி உய்த்துணரவேண்டியதாகும். காலத்தால் குலத்தால், தொண்டால், கொள்கையால் வேறுபட்ட இத் திருத்தொண்டர்கள் சைவம், சிவன் என்னும்இறையுணர்வாலும் பேசும் தமிழ்மொழியாலும் ஒருவகையினராகச் செயற்பட்டமை எக்காலத்திற்கும் வேண்டிய பொதுமையுணர்வு நிலைப்பாடாகும். இன்று நாம் நாடவேண்டியதும் இந்தப்பொதுமையுணர்வு வழிப்பட்டவிடுதலையே.

இந்நூலின் விலை அதிகமே. ஆயினும் பயன்மிக்க ஒருவெளியீடு ஆகும். சேக்கிழார் செய்த பெரியபுராணம், நாவலர் பெருமானின் பெரியபுராண வசனம் என்பன சைவ சமயி ஒவ்வொருவரும் அறியவேண்டியவை. பேணிப்பயன் பெறவேண்டியவை. இவை இன்று கிடைக்கும் அருமையினைப் போக்கும் வகையிலும் அவற்றினைத் தேடிப்படிக்கும் மனவளர்ச்சிக்கும் இந்தச் சிறு வினா-விடை நூல் நிச்சயமாக உறுதுணைபுரியும்.

— தி. பொன்னம்பலவாணர்.

## சரசோதிமாலை முதல்

இவற்றைக் கருத்திற்கொண்டு இந்நூல் ஆரியச்சக்கரவர்த்திகள் காலத்தது எனப்பொதுவாகக் கருதப்பட்டுவருகின்றது. எனினும் இதுஇன்னும் வலுவான சான்றுகளால் நிறுவப்படவேண்டியதாகும் இரகுவம்மிசம் காப்பியம் அரசகேசரி என்பவராற் பாடப்பட்டது இவர் ஆரியச்சக்கரவர்த்திகள் மரபினர் எனவும் எதிர்மன்னசிங்கன் என்ற இயற்பெயருடைய எட்டாம் பரராசசேகரனின் [கி. பி. 1591—1616] உறவினர் எனவும் அறியப்படுகிறார்.

### கண்ணகி வழக்குரை காப்பியம்

கண்ணகி வழக்குரை காப்பியம் தமிழின் முதற் பெரும் காப்பியமான சிலப்பதிகாரத்தின் சதையம்சத்தை அடிப்படையாகக் கொண்டது. அதன் கதைமாந்தரான கோவலன்,கண்ணகிஎன்போர் தொடர்பாக ஈழத்தில் நிலவிவந்த வய்மொழி மரபுகளை உள்ளடக்கமகக்கொண்டது. உருவநிலையிலும் நடையிலும் வாய்மொழி இலச்கியப்பண்புகளையும் புலப்படுத்தி நிற்பது இரகுவம்மிசம் வடமொழியிலே காளிதாஸ மகாகவியாத்த 'ரகுவம்ஸ' காவ்யத்தினைத் தழுவி எழுந்ததாகும். பெரும்பாண்மை மூலநூலின் தமிழாக்கமாகவே அமைந்த போதும் சிற்சில இடங்களில் மூலநூலினின்று வேறுபட்டுள்ளமைகாரணமாக இதனைத் தமிழாக்கம் என்றுசொல்வதை விடத் தழுவல் என்றுகொள்வதே பொருத்தமானதாகும். அமைப்பிலும் நடையிலும் செம்மொழிப் புலமையின் செறிவான நிலையை இக்காப்பியத்திலே அவதானிக்கலாம்.

கண்ணகிவழக்குரை காப்பியம்சிலப்பதிகாரத்தின் கதையம்சத்தை அடிப்படையாகக் கொண்டதாயினும் அதனின்று சில அம்சங்களில் வேறுபட்ட கதை அமைப்புடையது. கதைமாந்தரின் பண்புகளிலும் வேறுபாடுகள் காட்டுவது. சிலப்பதிகாரத்தின் தலைவியான கண்ணகி தன் கற்பின் திண்மையால் தெய்வநிலை எய்துகிறாள். ஆனால் கண்ணகி வழக்குரையின் கண்ணகி தெய்வமாகிய 'உமை'யின் அவதாரமாக அமைந்தவள். இவ வேறுபாடுகட்கு அடிப்படை ஈழத்திலே கோவலன், கண்ணகி என்போர் தொடர்பாக நிலவிவந்த வாய்மொழி மரபுகளாகும். காப்பிய அமைப்பிலும் இந்த வாய்மொழி மரபுக்குரிய பண்புகளைத் தெளிவாக அவதானிக்க முடிகிறது.

வாய்மொழி மரபுக்குச் சிறப்பாக உரிய நாட்டுப்புற மக்களது நம்பிக்கைகள், சடங்குகள், செவிவழிச் செய்திகள், பழமொழிகள் முதலிய யாவும் இக்காப்பியத்தில் விரவியுள்ளன. யாப்பமைதி என்ற வகையில் வெண்பா, விருத்தம் முதலிய பாவடிவங்களோடு சிந்து, நடை, நடைசாரி ஆகிய பெயர்களிலமைந்த பாடல்களும் இந்நூலில் விரவியுள்ளன. வாய்மொழிப்பாடல்களின் ஓசைக்கு மிக நெருக்கமான ஓசை இக்காப்பியப் பாடல்கள் பலவற்றிற் பயின்றுள்ளமையையும் அவதானிக்க முடிகிறது. இப்பாடல்களை இவ்வாறு இசைத்துப் பாடும் முறைமை இப்பொழுதும் பல பாகங்களில் நிலவுகிறது. குறிப்பாக வற்றாப்பளைச் கண்ணகையம்மன் ஆலயத்தின் பொங்கல் விழா நாட்களில் இப்பாடல்கள் இவ்வோசையிற் பாடப்படுகின்றன.

இக்காப்பியத்தை உருவாக்கிய கவிஞன் தனது காலப் பகுதியில் ஈழத்தின் பலபாகங்களிலும் நெடுங்காலமாகப் பயினறு வந்த கோவலன், கண்ணகி கதைகள், அவற்றோடு தொடர்பு கொண்டுள்ள சமயமரபுகள் ஆகியயாவற்றையும் இதனைப் புனைந்துள்ளான் என்பதும் அவ்வாறு புனையும் போது அவற்றின் வாய்மொழி மரபுக் கூறுகளைச் செயற்கையாக மாற்றியமைத்துக் கொள்ள முனையாமல் இயற்கையாக உள்ளபடியே பெரிதும் பேணிக்கொள்ள முயன்றுள்ளான் என்பதும் இக்காப்பிய அமைப்பிலே நன்கு புலனாகின்றது.

இரகுவம்மிச காப்பியம் அந்நூல் எழுந்த காலப்பகுதியிலே தமிழகத்திற் சிறப்பாகப் பேணப்பட்டு நின்ற செம்மொழிப்புலமை மரபை ஈழத்திலே பிரதிபலிப்பாக உள்ளது. வடமொழி இலக்கிய இலக்கணங்களின் செல்வாக்கிற்குட்பட்டதும் சொல்லங்காரப் பண்புகள் நிறைந்ததும் கற்றோர் கற்றுவியக்க வேண்டுமென்ற 'வித்துவ' நோக்குக் கொண்டதுமான ஒரு இலக்கியப் பண்பே அக்காலப் பகுதித் தமிழகத்தின் செம்மொழிப் புலமையாகப் பேணப்பட்டது அதனை இரகுவம்மிசம் முழுவதுமாகப் பிரதிபலிக்கின்றது. வடஇந்தியாவில் ஆட்சிபுரிந்த ஒரு அரசபரம்பரையின் கதையைக் கூறுவதான இக்காப்பியம் அதனை இயற்றியவர் ஈழத்தவர் என்பதைத் தவிர வேறு வகையில் ஈழத் தொடர்பு அற்றது.

எனவே மேற்சுட்டிய இரு முதற்காப்பியங்களிற் கண்ணகி வழக்குரையே ஈழத்துத் தமிழ்க் கவிதை என்ற வகையிற கவனத்துக்குரியதாகிறது. இரகுவம்மிசம் தமிழகத்துச் செம்மொழிப் புலமையின் வாரிசாக மட்டுமே உள்ளது. ஈழத்தின் பண்பாட்டுத் தளத்தில் பதிகொண்ட பெருமை கண்ணகி வழக்குரைக்கே உரியதாகும்.

கண்ணகி வழக்குரையின் பிரதிகள் பல்வேறு பாடபேதங்களுடன் ஈழத்தின் பல பாகங்களிலும் பேணப்பட்டு வருகின்றன. வடமாகணத்தின் சில பகுதிகளில் வழங்கிய பிரதிகள் கோவலனார் சதை என்ற தலைப்பில் 1962 இல் மா. சே. செல்லையா என்பவரால் நூலுருப்பெற்றன. கிழக்குமாகாணத்தில் வழங்கிய பிரதிகள் வித்துவான் பண்டிதர் வி சீ கந்தையா அவர்களால் 1968 இல் கண்ணகி வழக்குரை என்ற தலைப்புடன் நூலுருப்பெற்றன. முல்லைத்தீவுப் பகுதியில் வற்றுப்பளைக் கண்ணகையம்மன் ஆலயத்திற் பேணப்பட்டுவரும் ஏட்டுப்பிரதி 'சிலம்புகூறல்' என்றபெயரில் வழங்குறது. இதைப்போல வேறு ஏட்டுப்பிரதிகளும் வெவ்வேறு பிரதேசங்களில் உளவாகலாம். இவ்வகை ஏட்டுப்பிரதிகளையும் மேற்சுட்டிய நூற்பிரதிகளையும் ஒப்புநோக்கி ஒரு சுத்தப் பதிப்பை வெளிக்கொணரவேண்டியது ஈழத்துக் கவிதை (இலக்கிய) பாரம்பரியம் பற்றிய ஆய்வுக்கு முக்கிய தேவையாகும்.

[தொடரும்]

## நீண்ட வாழ்வின் மர்மம்

பிரிட்டனைச்சேர்ந்த 108 வயதானவர்தான் அந்நாட்டு ஆண்களிலேயே நீண்டகாலம் உயிர்வாழ்ந்தவர். தாம் அவ்வளவு ஆண்டுகள் உயிருடன் இருக்கக்காரணம மது அருந்தாமலும் சிகரெட் சுருட்டு- முதலியவற்றைப் புகைக்காமலும் இருந்து உடல்வளைய வேலை செய்ததால்தான் என்று அவர் கூறுகிறார்.

ஆதாரம்—அம்புலிமாமா தொகுப்பு—க.கனகராசா.

## மன்னார் சுங்க இலாகா ஆரம்பம்

மன்னார், சனி

கடந்த இரண்டு வருடங்களுக்குப் பிகனர் தலைமன்னார் இறங்குதுறையில் சுங்க இலாகா மீண்டும் செயற்படத் தொடங்கியுள்ளது. இச் சுங்க அலுவலகம் முன்னர் இருந்த கட்டடத்திலேயே தொடர்ந்தும் இயங்குகின்றது.

இந்தியாவிலிருந்து வரும் அகதிகளைப் பரிசிலனை செய்வது, கள்ளக் கடத்தல் படகுகளை பிடிபட்டால் விசாரணைகள் செய்வது போன்ற வேலைகளை இந்த அலுவலகம் மேற்கொண்டுள்ளது.

### 31-ம் நாள் நினைவஞ்சலி



அமரர்
**ஆறுமுகம் சின்னத்தம்பி நாகரட்னம்**
உரும்பிராய் தெற்கு
(இளைப்பாறிய சிறைச்சாலை அத்தியட்சகர் மட்டக்களப்பு)

மலர்வு: 15-07-1910
உதிர்வு: 19-12-1986
அந்தியேட்டி: 18-01-1987
திதி: திருதியை

கீரிமலை சேந்தான் குளம் முன்னாள் கிராமசேவையாளர், காலஞ்சென்ற ஆ. கி. குருநாதபிள்ளையின் அன்புச் சகோதரராய்த் திகழ்ந்த எங்கள் பண்புடைத் தெய்வமே

அன்பும், பண்பும் ஆழ்ந்த பேரறிவும் இன்பம் ததும்பும் இனியமென் மொழியும் சந்தமும் முறுவலும் தண்ணீ தகையையும் நிரம்ப, ஆளுமை விளங்கும் ஆண்டகையாகி, குன்றிடை விளங்கும் குலதீபமாகி, எம்மிடை வாழ்ந்து வந்தீர்கள் ஆழ்கடல் அலையும் அணிகலம்போல இன்று எம்மையெல்லாம் ஆறாத் துயரில் ஆழ்த்தி பரதவிக்கவிட்டு மறைமிடற்றண்ணல் கழலினை சேர்ந்து கொண்டீர்கள். தங்கள் பெருந் துணையினை இழந்தோம் பிரிவாற்றாது துயருகின்றோம் ஆயினும், தாங்கள் மறைந்த 31ம் நாளாகிய இன்றும் என்றும் தங்கள் ஆத்மா பிறையணி வேணியன் பொன்னடிக்கமலத்தில் சாந்தியடைக வென்று இறைஞ்சி அஞ்சலி செலுத்துகின்றோம்.

சாந்தி! சாந்தி!!

எங்கள் தந்தையாரின் மறைவின்போதும் இன்றைய அந்தியேட்டி 31ம் நாட்கிரியைகளின் போதும் நேரில் சமூகந்தந்தும் அனுதாபச் செய்திகள் அனுப்பியும் எமக்கு ஆறுதல் அளித்த உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர், அன்பர்கள் யாவருக்கும் கடமைப்பாடும் நன்றியும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

C 7022


கூட்டுறவாளர்களே!

## கூட்டுறவு அச்சகம்

யாழ். ப. நோ. கூ. சங்க கிளை
57, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 22363

குறைந்த செலவோடு நிறைந்த சேவை சகல விதமான அச்சக வேலைகளுக்கு!

யாழ்ப்பாணம் பல. நோ கூட்டுறவுச் சங்க கூட்டுறவு அச்சகத்தை நாடுங்கள்.

குறைந்த செலவில் நிறைந்த சேவை குறித்த தவணையில் செய்து கொடுக்கப்படும்.

யாழ் நகரின் அனுபவமிக்க சிறந்த அச்சக ஊழியர்களின் திறமையைப் பயன்படுத்தி நவீன அச்சுயந்திரங்களில், புதிதாக இறக்குமதி செய்யப்பட்ட எழுத்துக்களினைக், தரமான அச்சிட்டு விநியோகிக்க உத்தரவாதமளிக்கின்றோம்.

தயவுசெய்து இன்றே உங்கள் தேவைக்கு வேண்டிய உத்தரவை அனுப்பி வைத்து கூட்டுறவுச் சேவையின் முன்னேற்றத்துக்கு ஒத்துழைப்பு நல்கும் வண்ணம் பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

கூட்டுறவே நாட்டுயர்வு
வளர்க கூட்டுறவு
கூட்டுறவுச் சேவையிலுள்ள,

பொது முகாமையாளர்.
யாழ். ப. நோ. கூ. சங்கம்.
A-3492


### 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



**செல்வன் உமாகாந்தன் (ராஜா)**

அன்னையின் மடியில்: 30-10-1962
இறைவன் பணியில்: 29-01-1986

அன்புச் செல்வமே, அருமை மகனே! அழகொளிரும் திங்களே, மகனே! மன்றாடி வேண்டி நின்றோம் மறுத்திட்டான் கான தேவன். சென்றதே வருடமொன்று. சிலிர்க்குதே எங்கள் நெஞ்சம். புன் சிரிப்பின் புகலிடமே! போன இடம் சொல்லாயோ! அப்பாவை அங்கே அழைத்திட மாட்டாயோ! ஆறாது. ஆறாது நெஞ்சம். இது அழுதாலும் தீராது துன்பம். வேருகி மாறாத பந்தம் எங்கள் விழி நீரே! உமாகாந்தா உன் பஞ்சம். மகனே நீ மீளாத் துயில் கொண்டு ஓராண்டுகாலம் ஓடி மறைந்தாலும் மாறாது மறையாது ஒளி வீசும் உன் உருவம் உன் பிரிவால் வாடும்: அப்பா, அம்மா, சகோதர, சகோதரிகள், அத்தான் மருமகன், மற்றும் உற்றார், உறவினர் நண்பர்கள்.

நா. சின்னராசா,
பெற்றோர் செற்றடி,
மானிப்பாய்.
(C 7018)

## இன்றைய பலன்

**மேடம்**
புதிய எண்ணங்கள் தலைதூக்கலாம். இறை வழிபாடு மேலோங்கும். தொழிலிலும் தொல்லைகள் விலகும் உணவு விடயத்தில் அவதானம் செலுத்தவும். வீண் செலவுகளைக் கட்டுப்படுத்தவும்.

**இடபம்**
போதுமென்ற மனதுடன் செயலாற்றுவீர்கள். எதிலும் நிறைவு தென்படும். கடமையும் சிறக்கும். பிறர் ஆதரவுமுண்டு. இல்லத்திலும் விவா தங்கள் இடம்பெறும்.

**மிதுனம்**
பெரியோர் ஆதரவு உண்டு. உத்தியோக உயர்வுமுண்டு. உள்ளத்திலும் உவகை துள்ளும். கருடப் பார்வை வட்டமிடும். அடக்கமாக இருப்பின் அமைதியுண்டு.

**கடகம்**
நம்பிக்கை மோசடி நடக்கும். வீண் டெயர் கேட்கவும் நேரிடலாம். தொழில் விடயத்தில் கண்ணுடைட்பு வேலைகளும் நடைபெறும். குடும்பத்திலும் சுமுகமான நிலை தென்படும் பிறர் ஆதரவும் உண்டாம்.

**சிங்கம்**
உதவி செய்யப் போய் உபத்திரவத்தை அணைத்துக் கொள்ளுவீர்கள். வரவிலும் சிரமங்கள் தோன்றும். பிணைணியில் பிளவும் தோன்றலாம். எவ்விடயத்திலும் எச்சரிக்கை நன்று. கல்வி மேம்பாடுமுண்டு.

மாதம்: தை
திகதி: 5 (1987-1-18)
கிழமை: ஞாயிறு
திதி: திருதியை மேல் சதுர்த்தி
நக்ஷத்திரம்: மகம்

**கன்னி**
இக்கட்டரமான சம்பவங்கள் இடம்பெறும் ஆசிரியர்களும் பெருமையடைவர். எதிலும் தூய்மையைக் காண்பீர்கள் தொழிலில் சமனிருக்கயுண்டாம். மனச் சஞ்சலங்களும் உருவாகும். எதிலும் பொறுமை அவசியம்.

**துலாம்**
கடற்றொழில் புரிவோர் அவதானம் வேண்டும் வாழ்க்கையில் புதிரானநிலை தோன்றும் எதிலும் தாக்க மனப்பான்மை உருவாகும். கொடுத்த பொருள் சேதமாகலாம், செய்வழிபாடு நன்று.

**விருச்சிகம்**
மாதரு வழியாலும் மனதுக்கும் நிம்மதி பிறக்கும் தொல்லைகளும் நிவர்த்தியாகும் தொழிலிலும் மோசடிகள் உருவாகலாம். நண்பர்கள் சேர்க்கையுமுண்டாம்,

**தனுசு**
புத்தரர் ஒருவரின் பயணம் குறித்து ஆலோசனை தீட்டுவீர்கள் தொழில் லாபமுண்டு உற்சாகமாக நாளைக் கழிப்பீர்கள், அன்னியர் விடயத்திலும் அவதானம் வேண்டும் மாணவர்களாயின் கவனம் செலுத்தவும்.

**மகரம்**
வழக்குவிவகாரங்களில் மாட்டிக் கொள்ள நேரிடும். எதிலும் உணர்ச்சிவசப்படுவீர்கள். தொழிலிலும் கருத்து வேற்றுமை உருவாகும். பொருள் வரவுமுண்டாம். குடும்பத்திலும் சமயோக நிலை தோன்றும்.

**கும்பம்**
களஸ்திரப் பேச்சு நன்மையடையும் கடமையிலும் நிதானம் அவசியம், பொருள் விருத்தியுண்டாம். திடீர்ப் பிரயாணம் மேற்கொள்ளப்படலாம். சமயோசித புத்தி நல்வழி காட்டும்.

**மீனம்**
துன்பம் உங்களைத் தாலாட்டும். பாதையில் தடைகள் பல தாக்கும். வணிகர்கள் வாழ்க்கை சோதனை நிறைந்ததாக இருக்கும். எவ்விடயத்திலும் மனத்திடம் விரும்பத்தக்கது. கடமையும் சமபலனைக் கொடுக்கும்.

திருமலை வே. ரவீந்திரன்

### 31 - நாள் நினைவஞ்சலி



அருள்திரு
L. A. சிங்காரயர்
O. M. I., M.A Edu (London)

எங்கள் அன்பின் அருள் தந்தை எல். ஏ சிங்காரயர் அ. ம. தி அடிகளின் விண்ணக வாழ்வின் 31-ம் நாள் நினைவு திருப்பலி 19-1-87 திங்கள் காலை 6-45 மணிக்கு மாதகல் புனிததோமையார் ஆலயத்தில் நடைபெறும். அடிகளார் நித்திய பேரின்ப வாழ்வில் நிலைபெற இத்திருப்பலியில் கலந்து கொண்டு இறையருளை இறைஞ்சுமாறு அனைவரையும் அன்புடன் வேண்டுகின்றோம்

இவரின் பிரிவால் வருந்தும் திரு திருமதி எல் ஏ. யோசவ் குடும்பத்தினர்.
"அமிர்த வில்லா" மாதகல். C-7019


# பிரயாண ஒழுங்கு

GLORIA TRAVELS

★ Norway ★ Germany
★ France ★ Canada

ஆகிய நாடுகளுக்கு பிரயாண ஒழுங்குகள் செய்து தருவதுடன் எமது பிரயாண முகவர் உடன் அழைத்துச் செல்வார்.

மற்றும்

பாஸ்போட், பொண்ட் (BOND), விசா, ரிக்கற் ஆகியனவும் செய்து கொடுக்கப்படும்.

நோர்வே செல்பவர்களுக்கு இலவச பொண்ட் செய்து தரப்படும்.

GLORIA TRAVELS
சின்னத்தம்பி அவெனியூ,
மானிப்பாய்.
எமக்கு வேறு கிளைகள் கிடையாது!
(A-3296)


## மின்கம்பத் தண்டனை

வவுனியா, சனி

நெடுங்கேணிப் பகுதியில் சமூக விரோதச் செயல்களில் ஈடுபட்ட ஒருவருக்கு மின்கம்பத்தில் உயிருடன் கட்டப்பட்டு தண்டனை வழங்கப்பட்டது.

நெடுங்கேணி தர்மபுரத்தைச் சேர்ந்த இந்நபர் இப்பக்கம் ஒன்றின் பெயரைச்சொல்லி கடைகளில் பணம்பெற்றது கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்தே இந்த மின்கம்பத் தண்டனை வழங்கப்பட்டது [வா]

## கிராமிய செயற்குழு உறுப்பினர்கள்

சாவகச்சேரி சனி

கைதடி நுணாவிலில் குடும்ப திட்டச்சங்க கிராமிய செயற்குழு ஒன்று தெரிவு அண்மையில் தெரிவுசெய்யப்பட்டது.

இக்குழுவின் தலைவராக வி. எஸ் துரைராஜாவும், செயலாளராக ச. தங்கராஜாவும், செயற்குழு உறுப்பினர்களாக திருமதி செ சிவமணி, ஏ பெனடிக்ற் எஸ் பாலசுப்பிரமணியம் ஆகியோரும் தெரிவுசெய்யப்பட்டனர்.

## திடீர்சோதனை

வவுனியா, சனி

வவுனியா நகரில் இராணுவத்தினர் நவீனரக ஆயுதங்களுடன் திடீர் சோதனையை மேற்கொண்டிருந்தனர்

வவுனியா நகரில் உள்ள பெரும்பாலான கடைகளே இத்திடீர் சோதனைக்கிலக்காகின இந்தச் சோதனையின் போது குண்டுகள் ஏதும் பதுக்கி வைக்கப்பட்டிருக்கிறதா என்பதைக் கண்டுபிடிப்பதற்கு மோப்பம்பிடிக்கும் நாயும் சடுபடுத்தப்பட்டிருந்தது. [வா]

### பெயர் மாற்றம்

மட்டுவில் தெற்கு சாவகச்சேரி என்னும் முகவரியில் வசித்து வந்த வே தபோநிதி ஆகிய நான் எனது பெயரை வே. தபோதரன் என மாற்றம் செய்ய விரும்புகிறேன். (V Thabotharan) இதன் பின்னர் எல்லா ஆவணங்களிலும் வே. தபோதரன் என்றே கையெழுத்திடுவேன் என இவ்வறிவித்தல் மூலம் பகிரங்கப்படுத்துகிறேன்.

இப்படிக்கு,
வே தபோதரன்.
(V. Thabotharan)
C-7012

## முல்லை மாவட்டத்தில்
# ஒட்டுசுட்டான் வித்தியாலயம் முன்னணியில்

யாழ்ப்பாணம், ஞாயிறு

அண்மையில் வெளியான க. பொ. த. (உயர்தரம்) தேர்வில் முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த ஒட்டுசுட்டான் மகா வித்தியாலய மாணவி செல்வி மு. ஜானகி 264 புள்ளிகளைப் பெற்று முல்லைத்தீவு மாவட்டத்திலேயே முதல் இடத்தைப் பெற்றுள்ளார்.

மேலும் பரீட்சைக்குத் தோற்றிய பன்னிரண்டு மாணவரும் பல்கலைக்கழக அனுமதிக்குத் தகுதிபெற்றுள்ளார்கள்.

இவர்களில் ஐந்து மாணவர்கள் 240 புள்ளிகளுக்கு மேலும் மிகுதியினர் 215 புள்ளிக்கும் மேல் பெற்றுள்ளனர். இம் மாணவர்களை அதிபர் திரு. தா. சிவசம்பு பாராட்டியுள்ளார்.

## வைத்திய அத்தியட்சகர் உதவி

யாழ்ப்பாணம், ஞாயிறு

பல வருடங்களாக இயங்கி வரும் குருநகர் மருந்தகத்தில் குளிர்சாதனப்பெட்டி இல்லாததால், ஏற்பு ஊசி போட முடியாதநிலையில் மருந்தகம் இருப்பதை கிறீன்பீல்ட் சனசமூகநிலையத்தினர் யாழ்ப்பாண வைத்திய அத்தியட்சகருக்குச் சுட்டிக்காட்டி இருந்தனர்

இதைத்தொடர்ந்து இம் மருந்தகத்துக்குக் குளிர்சாதனப்பெட்டிகளும், மேலதிக ஏற்பு ஊசி மருந்துகளும் யாழ்ப்பாண வைத்திய அத்தியட்சகரால் வழங்கப்பட்டன. (ஓ)

## அதிபரின் சைக்கிள் மாயம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

நெல்லியடி மெதடிஸ்த மிஷன் பாடசாலையருகில் சைக்கிளை நிறுத்திவிட்டு சென்றவர் திரும்பிவந்து பார்க்கும்போது தமது சைக்கிள் களவாடப்பட்டது அறிந்து அதிர்ச்சியுற்றார்.

மேற்படி கல்லூரியின் அதிபர் திரு எஸ். வேலாயுதமே சைக்கிளை பறிகொடுத்தவராவார்

சைக்கிளுடன் பெறுமதி வாய்ந்த சில புத்தகங்களும் இருந்தன. (ஓ)

## பாதிக்கப்பட்ட இந்த
# கடற்றொழிலாளருக்கு உதவ புதிய அமைப்பு

பண்டத்தரிப்பு சனி

மாதகலில் ''கிராமிய கடற்றொழில் சமூக அபிவிருத்தி அமைப்பு'' என்ற பெயரில் புதிய அமைப்பு ஒன்று அண்மையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது. இப்பகுதியில் கடல் வலய தடைச் சட்டத்தினால் பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளர்களுக்கு பொது ஸ்தாபனங்களிடமிருந்து உதவிகளை பெற்றுக் கொடுப்பதும், உணவு முத்திரை, உணவுப் பங்கீட்டு அட்டை என்பனவற்றை உரியமுறையில் சகலருக்கும் பெற்றுக் கொடுப்பதும் இந்த அமைப்பின் முக்கிய செயற்பாடுகளாகவிருக்கும் என்று தெரிவிக்கப்படுகின்றது இந்த அமைப்பின் நிர்வாகிகள் விபரம் பின்வருமாறு:-

தலைவர்: செ. சூசைப்பிள்ளை, உபதலைவர்: வ. சற்கண்டு, செயலாளர்: ஆ. துரைவீரசிங்கம், உபசெயலாளர்: கு. அன்ரனிபொன்ராசா. பொருளாளர்: தோ. அந்தோனிப்பிள்ளை நிர்வாகசபையொன்றும் அமைக்கப்பட்டுள்ளது.


## பிரயாண ஒழுங்குகள்

கனடா
லண்டன்
நோர்வே
மேற்கு ஜெர்மனி

சகல நாடுகளுக்குமான இலங்கைக் கடவுச்சீட்டு வைத்திருக்கவேண்டும்.

மேற்குறிப்பிட்ட நாடுகளுக்கு இரண்டு வார காலத்துள் பிரயாண ஒழுங்குகளனைத்தும் செய்து தரப்படும்.

உடனே தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:

**க. செல்வநாயகம்**

''ஸ்ரீ சாந்தி நிகேதன்'' வளாக ஒழுங்கை,
(பலாலி வீதிக்கண்மையில்)
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 24814 [C 6978]



STOP ஸ்டொப் பிறேக் புளூயிட்




**யப்பானிய வாகனங்களுக்கும் ஏனைய வாகனங்களுக்கும்.**

இங்கிலாந்தின் ஐசிஐடன் இணைந்து தயாரிக்கப்படும் ''ஸ்டொப்'' பிறேக் புளூயிட். ''ஸ்டொப்'' ஹைட்ரொலிக் பிறேக், & கிளட்ச் எண்ணெய் யப்பானிய மோட்டார் வாகனங்களுக்கும், வேறு வகையான வாகனங்களுக்கும் உகந்தது.

''ஸ்டொப்'' எஸ்ஏஈ ஜே 1703 எவ் (டொட் 3) தர நிர்ணயத்திற்கேற்ப தயாரிக்கப்பட்டிருப்பதுடன் எல்லா டொட் 3 எண்ணெய்யுடனும் கலக்கத்தக்கது.

CHEMANEX
**கெமனெக்ஸ் லிமிட்டெட்**
52, கால்பேஸ் கோர்ட் 2,
கொழும்பு-3. தொலைபேசி இல: 26845-8

TAL

ஸ்டொப் பிறேக் – புளூயிட்
நீங்கள் இதை நம்பி உபயோகிக்கலாம்.


## சேவை நலன் பாராட்டு விழா

(கோப்பாய் நிருபர்)

வலி-கிழக்கு உதவி அரசாங்க அதிபராக இருந்து சேவை இளைப்பாறிய திரு. கு. கிட்ணர், யாழ் மாவட்ட அரச செயலகத்திற்கு இடமாற்றம் பெற்றுள்ள உதவி அரசாங்க அதிபர் திரு.க.சபாபதிப்பிள்ளை ஆகியோரின் சேவை நலம் பாராட்டுவைபவம் கோப்பாய் வடக்கு சரவணபவானந்த வித்தியாசாலையில் நேற்று நடைபெற்றது.

## ஓய்வு பெற்றார்

பண்டத்தரிப்பு, சனி.

பொன்னாலை வரதராஜப் பெருமாள் வித்தியாலய அதிபராக கடமையாற்றிய திரு. கு. செல்லத்துரை கடந்த 3ம் திகதி தொடக்கம் பதவியிலிருந்து ஓய்வுபெற்றுள்ளார். கண்டி மாவட்டம் உட்படப் பல வேறு பகுதிகளிலும் 36 வருடகாலம் ஆசிரியராக சேவையாற்றிய திரு செல்லத்துரை பரம்பரை ஆயுர்வேத வைத்திய என்பதும் சமூகசேவையாளர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## தினமும் அகதிகள் வருகின்றனர்

மன்னார், சனி

கடந்த 1985ம் ஆண்டு இலங்கையிலிருந்து தமிழ்நாட்டுக்கு அகதிகளாகச் சென்றவர்கள் தற்சமயம் மீண்டும் தங்கள் தாயகம் திரும்புவதில் ஆர்வம் காட்டுகிறார்கள். இதனால் தமிழ்நாட்டில் மண்டபம் முகாமிலிருக்கும் அகதிகள் தாய்நாட்டிற்கு திரும்புவதற்காக சகல ஆயத்தங்களும் செய்யப்பட்டுவருகிறது.

தற்சமயம் தினமும் தலைமன்னார் இறங்குதுறை ஊடாக தமிழ்நாட்டின் அனுமதியுடன் படகுகள்சென்று அகதிகளை மன்னாரில் இறக்கிவருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

# மட்டக்களப்பில்
## கமாண்டோ சுட்டு 4 பேர்பலி

(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு, குருக்கள் மடத்தடியைச் சுற்றிவளைத்து தேடுதல் நடத்திய அதிரடிப் படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் நால்வர் பலியானார்கள்; ஒருவர் காயமடைந்தார். மேலும் 200 பேர் கைதுசெய்யப்பட்டனர்

நேற்று நடைபெற்ற இச்சம்பவத்தைத் தொடர்ந்து இப்பகுதியில் பதற்றநிலை தோன்றியுள்ளது. (கூ-மா)

## வடக்கு, கிழக்கில்
# வயிற்றோட்டம், மலேரியா
## தீவிரமாகப் பரவலாமென அச்சம்

கொழும்பு, சனி

வடக்கு, கிழக்கு மாகாண பொது சுகாதார நடவடிக்கைகள் முற்றாக தடைப்பட்டுள்ளதால் அப்பகுதியில் வயிற்றோட்டம், மலேரியா போன்ற நோய்கள் தீவிரமாக பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு அச்சம் தெரிவித்துள்ளது

யாழ் குடாநாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பெரும் நெருக்கடி நிலையால் அங்கு பொது சுகாதார அத்தியட்சகர் சென்று தடுப்பு நடவடிக்கைகள் ஏதும் எடுக்க முடியாதுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு, கிழக்கில் மீண்டும் இந்நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துவது குறித்து அண்மையில் சுகாதார அமைச்சினதும், போதனா வைத்தியசாலைகள் அமைச்சு அதிகாரிகளினதும் ஆலோசனைக்கூட்டம் கொழும்பில் நடைபெற்றது. எனினும் அங்கு இதுபற்றி எதுவித தீர்மானமும் எடுக்கப்படவில்லை

இதற்கிடையில் இப்பகுதிகளுக்கான அவசரதேவைகளுக்கான மருந்துவகைகள் விமானமூலம் அனுப்பப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (கூ-சி)

## தீ வைப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வருமான வரித்திணைக்கள அலுவலகத்துக்குள் புகுந்த இனந்தெரியாத கோஷ்டியினர் அங்குள்ள தஸ்தாவேஜுகளுக்குத் தீ வைத்துவிட்டு தலைமறைவாகி விட்டனர்

நேற்றுமுன்தினம் இரவு இச்சம்பவம் இடம்பெற்றது. (கூ-மா)

## தேங்காய் விலை உயர்வு

புங்குடுதீவு சனி

புங்குடுதீவு பகுதிகளில் தேங்காய்களுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவிவருகிறது. முன்பு ஒரு சாதாரண தேங்காய் 3.00 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டுவந்தது தற்போது அத்தேங்காயிலும் பார்க்க மிகச் சிறிய தேங்காய் ஆறு ரூபா வரை. புங்குடுதீவில் உள்ள கடைகளில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

## கருத்தரங்கு

சாவகச்சேரி, சனி

சர்வதேச சமாதான சேவை இயக்கம் பெப்ரவரி மாதம் 4ம் திகதி 'சுகாதாரமும் வாழ்வும்' எனும் தலைப்பிலான கருத்தரங்கு ஒன்றினை சாவகச்சேரியில் நடாத்தவுள்ளது.

இக்கருத்தரங்கினை, தொழில் திணைக்களப் பிரதி ஆணையாளர் திரு எம். பொன்னம்பலம் நடாத்தவுள்ளார். (ஓ)


## Jaffna College Technical Institute, VADDUKODDAI
## ''B. Eng: பொறியியல் பட்டதாரி கல்வி''

அங்கீகரிக்கப்பட்ட பாடத்திட்டத்தில் பொறியியல் கல்வி
**19-1-87இல் ஆரம்பமாகின்றது**

G. C. E. A/L (Maths) 3 பாடங்களில் சித்தியடைந்த இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

நமது பிரதேச மூலவள உற்பத்தி, அபிவிருத்தி திட்ட பயிற்சியும் அளிக்கப்படும். கல்வி, நற்சாட்சி சான்றுகளுடன் உடனே தொடர்புகொள்ளவும்.

[A 3490] பணிப்பாளர்.



## வாடிக்கையாளர்களுக்கு ஒரு முக்கிய அறிவித்தல்

உங்களது சௌகரியத்திற்காக செம்மணி வீதி நல்லூரிலுள்ள எங்களது தொழிற்சாலையில் மேலதிக விற்பனை நிலையம் ஒன்று திறந்திருக்கிறோம் என்பதை இன்னுமொருமுறை நினைவூட்ட விரும்புகிறோம்.

அமைப்பு:- முத்திரை சந்தியிலிருந்து 50 யார் தூரத்திலும் கச்சேரி நல்லூர் வீதி, செம்மணிவீதி சந்திக்கு எதிராகவும் அமைந்துள்ளது.

முக்கிய குறிப்பு:- ஆஸ்பத்திரி வீதியிலுள்ள எங்களது விற்பனை நிலையம் வழமைபோல் தொடர்ந்து இயங்கும்.

# சாமுவேல் சன்ஸ் அன் கொம்பனி லிமிட்டெட்

தொலைபேசி இல: 206. 208 ஆஸ்பத்திரி வீதி- 22462
17, செம்மணி வீதி, நல்லூர்- 22199
(3488)

## கடைசி நேர வரி விளம்பரம்

### விற்பனைக்கு

இறக்குமதி செய்யப்பட்ட Blue Malaviya மீன்கள் உட்பட பல இன வளர்ப்பு மீன்கள் விற்பனைக்குண்டு. S. உருத்திரன், மணியகாரன் ஒழுங்கை. கொக்குவில் கிழக்கு கொக்குவில். (C-7029)


## நோயினால்பாதிப்பு

புங்குடுதீவு. சனி

புங்குடுதீவிலுள்ள குழந்தைகளுக்கு பெருமளவில் சளிச்சுரம் நோய் ஏற்பட்டிருக்கிறது. இதனால் இக்குழந்தைகள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றார்கள்.

இந்நோயினால் பாதிக்கப்பட்டுள்ள குழந்தைகள் அரசினர் வைத்தியசாலைகளிலும் தனியார் மருத்துவமனைகளிலும் சிகிச்சைபெற்று வருகின்றார்கள் குழந்தைகள் மரணிக்கும் அபாயமும் உள்ளதாக தெரிகிறது.


## எமது இன்றைய வெளியீடுகள்

(1) காதல் பரிசு

★ கமல் ★ ராதா ★ அம்பிகா

(2) ராஜமரியாதை

★ சிவாஜி ★ ராதா

(3) வெளிச்சம்

★ கார்த்தி ★ ரஞ்சினி

(4) சிறைப்பறவை

★ விஜயகாந் ★ ராதிகா ★ வெ.ஆ மூர்த்தி

**சயந்தா வீடியோசென்ரர்**

கே. கே. எஸ் வீதி. கோண்டாவில் மேற்கு.

(C 7031)

## விசேட அறிவித்தல்

**அம்பலவாணர் அன் சன்ஸ்**

**196, கே. கே. எஸ். வீதி,**

**யாழ்ப்பாணத்தில் அமைந்திருக்கும்**

எமது ஸ்தாபனம் பாடசாலை மாணவர்கள் அலுவலக பாவனையாளர்கள், மின்சாரப் பாவனையாளர்கள் நன்மை கருதி கீழ்க்கண்ட விலாசத்திலும் சகலபொருட்களையும் பெற்றுக்கொள்ள வசதிகள் செய்துள்ளோம் என்பதை அறியத்தருகின்றோம். சகலபொருட்களும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளவும்.

தொடர்புகொள்ளவும்:

**அம்பலவாணர் அன் சன்ஸ்**

**200, அரசடி வீதி,**

**கந்தர்மடம் [சந்தி],**

**யாழ்ப்பாணம்.**

**தொலைபேசி, 24319** (A3496)

## வீடியோ புளொசம்ஸ் இன்றைய வெளியீடு

(1) சிவாஜி, கார்த்திக், ஜீவிதா

ராஜமரியாதை

(தரமானபிரதி)

(2) கமல், அம்பிகா, ராதா, ஜனகராஜ்

காதல் பரிசு

(தரமான பிரதி)

(3) கார்த்திக், ரஞ்சினி,

வெளிச்சம்

(தரமான பிரதி)

(4) சத்யராஜ் கார்த்திக்

பூவிழி வாசலில்

(தரமான பிரதி)

கலர்ப்புகைப்படங்களை குறைந்த விலையில் (4/75) குறைந்த தினங்களில் (5) கழுவிக் கொடுக்கும் இடம்.

**VIDEO BLOSSOMS**

இந்தியாவிலும் இலங்கையிலும் சிறந்த கலர் வீடியோ கலர் புகைப்படப் பிடிப்பாளர்கள் உங்களது இல்லங்களில் நடைபெறும் திருமண வைபவங்களையும் மற்றும்ஏனைய நிகழ்ச்சிகளையும் அதிக சிறந்த முறையில் படம் பிடித்து மகிழ தொடர்பு கொள்ள வேண்டியதும் தரமான வீடியோ கொப்பிகளையும் வாடகைக்கு பெற்றுக் கொள்ள வேண்டிய இடம்.

VIDEO BLOSSOMS.
30, SIVAPRAGASAM STREET,
JAFFNA.

த வீடியோ பிளொசம்ஸ், பரமேஸ்வராசந்தி, திருநெல்வேலி. (C 7034)


## 5-வது மட்டுப்படுத்தப்பட்ட ஆட்டம்

# இந்திய அணி வெற்றி மகநாம சிறந்த வீரர்!

கொழும்பு, சனி

இந்திய - இலங்கை அணிகளிற்கிடையிலான 5-வதும் இறுதியுமான ஒருநாள் சர்வதேச மட்டுப்படுத்தப்பட்ட கிரிக்கெட் போட்டியில் இந்தியா வெற்றிபெற்றது

முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணியினர் 40 ஓவர் 4 விக்கெட்டுகளை இழந்து 299 ஓட்டங்களை எடுத்தனர் இந்திய அணியினர் ஒருநாள் மட்டுப்படுத்தப்பட்ட சர்வதேச போட்டிகளில் பெற்ற ஆகக் கூடிய எண்ணிக்கை இதுவாகும்

தொடர்ந்து இலங்கை அணியினர் 7 விக்கெட்டுகளை இழந்து 249 ஓட்டங்களை மட்டுமே 40 ஓவர்களில் பெற்றனர். ரோசன் மகாநாம அபாரமாக ஆடி 98 ஓட்டங்களைப் பெற்றார்.

இந்தியத் தரப்பில் அசாருதீன் 108 ஓட்டங்களைப்பெற்றார், இந்த ஆட்டத்தில்சிறந்த வீரராக ரோசன் மகநாம தெரிவு செய்யப்பட்டார்.

இலங்கை அணியின் இந்திய கிரிக்கெட் சுற்றுப் பயணத்தில் இந்திய அணி மட்டுப்படுத்தப்பட்ட தொடரில் 4—1 என்ற ரீதியில் வெற்றிபெற்றுள்ளது.

## உதைபந்தாட்ட போட்டி

கிளிநொச்சி, வெள்ளி

பொங்கல் தினத்தை முன்னிட்டு உருத்திரபுரத்தில்தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் உதைபந்தாட்டக் கோஷ்டியும் உருத்திரபுரம் விளையாட்டுக் கழகமும் பங்குகொண்ட சிநேக பூர்வமான உதைபந்தாட்டப்போட்டியொன்று மிகவும் விறுவிறுப்பான முறையில் நடைபெற்றது.

கிளிநொச்சியில் மிகவும் நீண்டகால இடைவெளியின் நடைபெற்ற இவ்உதைபந்தாட்டப்போட்டியை பெருந்தொகையான மக்கள் பார்த்து ரசித்தனர் போட்டியில் உருத்திரபுரம் விளையாட்டுக்கழகம் 3—1 கோல்களால் வெற்றியீட்டியது இப்போட்டிக்கு ஆசிரியர் சண்முகராசா மத்தியஸ்த்தம் வகித்தார்.

## வவுனியாவில் எரிபொருள் விநியோகத்தில் கட்டுப்பாடு

வவுனியா சனி

வவுனியாவில் அனுமதிப் பத்திரங்களுக்கு எரிபொருள் பெறுவதிலும் கட்டுப்பாடுகள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன

இதுவரை காலமும் அனுமதிப்பத்திரங்களுக்கு எரிபொருள் தாராளமாக விநியோகம் செய்யப்பட்டபோதும், நேற்றிலிருந்து அனுமதிப் பத்திரங்களுக்கு மிகக் குறைந்தளவு 2 தொடக்கம் 25 லீற்றர் வரை) எரிபொருள் வழங்கப்படுகிறது

இக்கட்டுப்பாட்டுக்கு அநுராதபுரத்தில் இருந்து எரிபொருள் எடுத்துவருவதில் ஏற்படும் தாமதமே காரணமாகும் எனக் கூறப்படுகிறது,

## புங்குடுதீவுக்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யும் பெரிய கப்பல்கள் வேட்டுக்களைத்தீர்ப்பதையும் தினமும் நடவடிக்கையாகக் கொண்டுள்ளன

இதனால் கடல் பகுதிகளில் தொழில் செய்ய முடியாத நிலையில் புங்குடுதீவு மீனவர்கள் பெரும் பீதியுடன் நாளந்தம் இருக்கவேண்டியுள்ளது.

## எரிபொருள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

போக்கினால் விணடிக்கப்படும் என்றும் கூட்டணியின் பொலிட்பீரோ அச்சம் தெரிவித்துள்ளது

அப்பாவி மக்கள் மீது இலங்கை அரசு விதித்திருக்கும் பொருளாதார தடைக்கெதிராக சர்வதேசரீதியில் குரல் எழுப்பவேண்டுமென்றும் மேற்படி கூட்டணியின் பொலிட்பீரோ வேண்டுகோள் விடுத்துள்ளது. (எ)

## பவுஸர்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பட்டதாகவும் ஒருவர் விசாரணையின் பின் விடுவிக்கப்பட்டதாகவும் மற்றைய இருவரும் தொடர்ந்து விசாரணைக்குட்படுத்தப்பட்டு வருதாகவும் தெரியவருகிறது. (கூ-க)


3வது வெற்றி வாரம்

லிடோ திரையில்

10-30. 2-30 6-30

சுரேஷ் ரேவதி கவுண்டமணி மனோரமா நடித்த

**ஆகாயத் தாமரைகள்**

(புதிய வெளியீடு கலர்)

More Suitable for Adults

**வெலிங்டன் திரையில்**

10-30 2-30 4-30, 6-30

மயிர் கூச்செறியும் சம்பவங்கள் பிரமிக்க வைக்கும் திகிலூட்டும் மர்மங்கள் நிறைந்த

Nastassa Kiusk in CAT PEOPLE Sex)

(கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு மட்டும்.)


## வடக்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வடபகுதியில் எரிபொருள் தடையால் ஏறக்குறைய 8 இலட்சத்து 30 ஆயிரம் பேர் தற்சமயம் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் அமைச்சர் தெரிவித்தார். (க-கூ)

## வருடாந்த கூட்டம்

யாழ்ப்பாணம் ஞாயிறு

காங்கேசன்துறை யங்ஸ்ரோயல் விளையாட்டுக் கழகத்தின் வருடாந்தக் கூட்டமும், நிர்வாகிகள் தெரிவும் இன்று நடைபெறும்.

## வாழைச்சேனையில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நிலையத்திலிருந்து ஒரு ஜீப் சிகளில் 50க்குமேற்பட்ட பொலிஸார் நடந்து சந்தைப்பகுதி நோக்கிச் சென்றுகொண்டிருந்தனர் அச்சமயம் விடுதலைப் புலிகள் பொலிஸாரை நோக்கி சுப்பாக்கிப்பிரயோகம் மேற்கொண்டபொழுது 2 பேர் கொல்லப்பட்டனர். சிலர் காயமுற்றனர். விடுதலைப்புலிகள் தரப்பில் எவித இழப்புமில்லையெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (மா)

## பொதுத்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

திருமதி பண்டாரநாயக்கா தமது கட்சியின் அனைத்துப் பகுதி அமைப்பாளர்களையும் நேற்றுச் சந்தித்தார். அப்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: "89-ம் ஆண்டுக்கு முன்னர் பொதுத் தேர்தல் ஒன்றை நடத்தும் வகையில் அரசை வற்புறுத்தவேண்டும். எனவே ஸ்ரீ ல. சு. கட்சியின் அனைத்து அமைப்பாளர்களும் 89-ம் ஆண்டுக்குமுன்னர் ஒரு பொதுத் தேர்தலைச் சந்திக்கும் வகையில் தயாராக வேண்டும் என்று தெரிவித்தார். (கூ)

## சாவகச்சேரியில் பனை வளர்ப்போர் சங்கம்

சாவகச்சேரி, சனி

சாவகச்சேரித் தொகுதியில் இருக்கும் பனை உற்பத்தியாளர்களைக் கொண்ட பனை வளர்ப்போர் சங்கம் ஒன்று ஆரம்பிக்கப்படவிருக்கின்றது

இச்சங்கத்தில் உறுப்பினர்களாகச் சேர்ந்துகொள்ள விரும்புவார், அவ்வப்பகுதி விசேட சேவை அலுவலர்களிடம் விண்ணப்பப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம். (ஒ)

## 5 மணிநேர

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

படையினருக்கு உதவியாக வானத்திலிருந்து சரமாரியாகத் துப்பாக்கிப் பிரயோகங்களை மேற்கொண்டன.

புலிகள் இத்தாக்குதல்களுக்கும் ஈடுகொடுத்து பதிலடியை மேற்கொண்டனர் என்று அறிவிக்கப்பட்டது.

இத்தாக்குதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் கொலைப்பட்டோர் விபரம் வருமாறு:- குகன் (சண்முகம்) மந்துவில், சதா) திமதி) இபக்ச்சி, கமன் (ஜெயானந்தராசா) முகமாலை. அர்ச்சுனா (ஜெயபாலன்) கலயம், ஜெனி தங்காாசா) திருமலை, அஜித் (ராஜன்)

இவர்களுக்கு புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை இராணுவத்தினர் மீதான இத் தாக்குதலில் எட்டுப்பேர்வரை கொல்லப்பட்டனர். இவர்களின் சடலங்களை ஹெலிகாப்டர்களில் இராணுவத்தினர் ஆனையிறவு முகாமுக்குக் கொண்டுசென்றனர்.

இத்தாக்குதல் காரணமாக வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணம் வந்தபஸ் வண்டி மற்றும் வாகனங்களும், யாழ்ப்பாணத்திலிருந்து சென்றவாகனங்களும் பல மணிநேர தாமதத்துக்குள்ளாயின. [மா]

## முகாம்களில் உள்ளோர் சிறைக்குமாற்றம்

கொழும்பு, சனி

மட்டக்களப்பு பிராந்திய இராணுவ முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தீவிரவாத சந்தேக நபர்கள் வெகு விரைவில் சிறைச்சாலைகளுக்கு மாற்றப்படவுள்ளதாக நம்பகரமான தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேற்படி சந்தேக நபர்கள் குளிப்பதற்கோ, மலசலம் கழிப்பதற்கோ போதிய வசதிகள் முகாம்களில் ஏற்படுத்தப்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. படுக்கை வசதிகள்கூட சுகாதாரமாக காணப்படவில்லையாம். இவ்விடயம் தொடர்பாக மட்டக்களப்பு இணைப்பதிகாரி சிறைச்சாலை அதிகாரி திரு. பிலிப்சுடன் பேச்சுவார்த்தை நடாத்தியிருக்கிறார். (கூ-க)

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY
18 1·87 ஞாயிற்றுக்கிழமை

## டிரான்ஸ்போமருக்கு குண்டு

கொழும்பு, வெள்ளி
திருமலை மாவட்டத்திலுள்ள மிசர டிரான்ஸ்போமர் ஒன்றை தீவிரவாதிகள் இன்று குண்டு வைத்து தகர்த்ததால் அக்கிராமங்கள் முற்றாக மின்சாரமின்றி செயலிழந்துள்ளன என்று அரச வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## அறிமுகவிழா

யாழ்ப்பாணம், ஞாயிறு
"எனது நோக்கில் இலங்கைப் பாராளுமன்றம்" நூல் அறிமுக விழா இன்று மலை கோண்டாவில் நெட்டிலைப்பாய் பிள்ளையார் கோவில் முன்றலில் நடைபெறவுள்ளது.

செல்லப்பா நடராசாவினால் எழுதப்பட்ட இந்நூலின் அறிமுக விழா திரு க திருநாவுக்கரசு தலைமையில் நடைபெறும் யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளுர் இவ்விழாவில் தினகரன் ஆசிரியர் இ சிவகுருநாதன் திரு அ. ஞ் சாட்சரம், திரு இ. பொ. குமாரசாமி, திரு எம் எஸ் ஸ்ரீ தயாளன் ஆகியோர் மதிப்புரை நிகழ்த்துவார்கள்.

# பிரிட்டனில் நாடு கடத்தப்பட்ட தமிழர் ஆதரவாளர்—
# விராஜ் மெண்டிஸுக்கு மஞ்செஸ்டர் அங்கிலிக்கன் தேவாலயம் புகலிடம்

லண்டன், ஜன 17
இலங்கைத்தமிழ் தீவிரவாதிகளுக்கு ஆதரவு வழங்கிவருகிறார் என்ற குற்றச்சாட்டின் பேரில் பிரிட்டனிலிருந்து நாடு கடத்தப்பட்டுள்ள திரு. விராஜ் மெண்டிஸுக்கு மன்செஸ்டர் அங்கிலிக்கன் தேவாலயம் ஒன்று புகலிடம் வழங்கியுள்ளது.

திரு. மெண்டிஸ் ஒரு கம்யூனிஸ்ட் என்றும், இவர் இலங்கைத் தமிழ் தீவிரவாதிகளுக்கு கடந்த 3 வருடங்களாக தீவிர ஆதரவளித்து வருகின்றார் எனவும் பிரிட்டிஷ் அரசு தெரிவித்துள்ளது.

திரு மெண்டிஸ் கடந்த 13 வருடகாலமாகப் பிரிட்டனில் வசித்துவருகிறார்.

இவர் மீதான நாடுகடத்தல் உத்தரவுக்கெதிராக மன்செஸ்டர் நகர கவுன்ஸில், பிஷப் கிறிஸ்தவ தொழிற்சங்கம் ஆகியன தீவிரமாக இயங்கிவருகின்றன.

இந்த நாடு கடத்தல் உத்தரவை எதிர்க்கும் சாசனத்தில் கடந்த சில 32 ஆயிரம் பேர் கைச்சாத்திட்டுள்ளனர்.

மேற்படி எதிர்ப்பு முயற்சிகளைப் பிரிட்டனின் உள்துறை அமைச்சர் திரு. டேவிட் வெடிங்டன் நிராகரித்துள்ளார்.

அத்துடன் மஞ்செஸ்டர் அங்கிலிக்கன்தேவாலயம் விராஜ் மெண்டிஸுக்கு வழங்கிய புகலிடம் குறித்தும் பிரிட்டிஸ் உள்துறை அமைச்சு தீவிரமாக விசாரணை செய்து வருகிறது.

திரு மெண்டிஸ் தாம் தாயகத்திற்கு நாடு கடத்தப்படும் பட்சத்தில் தமக்கு பிராபத்து ஏற்படலாமென அச்சம் வெளியிட்டுள்ளார். (ஊ)

## இரு பொலிஸ் சார்ஜன்ட்கள் விபத்தில் பலி

(கொழும்பு நிருபர்)
மட்டக்களப்பு - அம்பாறை வீதியில் நேற்று இடம்பெற்ற பொலிஸ் ஜீப்வண்டி விபத்தில் பொலிஸ் சார்ஜன்ட் இருவர் பலியானார்கள். மேலும்பொலிசார் இருவர் படுகாயமடைந்தனர்.

படுகாயமடைந்த இருவரும் உடன் அனுராதபுரம் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர்.

பலியானவர்களில் ஒருவர் ரத்மலானையைச் சேர்ந்த சார்ஜன்ட் தஸநாயக்கா என்று அடையாளம் காணப்பட்டது. (எ)

## சிதம்பரம், நட்வர் விரைவில் மீண்டும் இலங்கை வருவர்
### -காமினி

கொழும்பு சனி
"இனப்பிரச்னை குறித்து தொடர்ந்து பேச்சுக்களை மேற்கொள்ள இந்திய இணை அமைச்சர்களான திரு. பி சிதம்பரமும் திரு சே நட்வட்சிங்கும் விரைவில் மீண்டும் இலங்கை வருவார்கள்"

இவ்வாறு காணி காணி அபிவிருத்தி மகாவலி அமைச்சர் காமினி திசநாயகா தெரிவித்துள்ளார்.

இந்திய வெளியுறவுத்துறை இணை அமைச்சர் திரு நட்வர் சிங் தமது நான்குநாள் மாஸ்கோ பயணத்தை முடித்துக்கொண்டு நாடு திரும்பியதும் சென்னையில் தமிழர் விடுதலைக் கூட்டணியுடனும் போராளிகள் குழுக்களுடனும் பேச்சுவார்த்தை நடத்துவார் என்றும் அதைத் தொடர்ந்தே அவர் அமைச்சர் திரு பி சிதம்பரத்துடன் இலங்கை வருவார் என்றும் திரு காமினி திசாநாயக்க தெரிவித்துள்ளார்

வடபகுதிக்கான பொருளாதாரத் தடைகுறித்து இந்திய அரசிடம் விளக்கிக் கூறியதாகவும் போராளிகளின் நிலைப்பாட்டை அவதானித்தே வடபகுதிக்கான பொருளாதாரத் தடை விலக்கிக் கொள்ளப்படும் என்ற இந்திய அதிகாரிகளிடம் தாம் கூறியதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

இந்தியாவுக்கான தமது பயணம் இனப்பிரச்னை குறித்து சில தவறான கருத்துக்களை போக்க முடிந்தது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## குப்பைக்கு மூட்டிய தீயில் சிக்கி சிறுமி மரணம்!

யாழ்ப்பாணம், ஞாயிறு
வீட்டுவளவுக்குள் குப்பை மேட்டுக்கு தீவைத்த சிறுமி ஒருத்தி அத்தீயினால் ஏற்பட்ட விபத்தில் மரணமானார்.

அச்சுவேலியில் இப்பரிதாப சம்பவம் நிகழ்ந்தது.

செல்வி ஜெனிவ் நிதர்ஷனி மரியநாயகம் (7 வயது) என்பவரே அச்சிறுமியாவார்.

கடந்த 3ம் திகதி தமது குப்பைக்கு விளக்கு தீமூட்டியபோது அச்சிறுமி அணிந்திருந்த உடையிலும் தீப்பற்றிக் கொண்டது. உடனடியாக இவரது தாயார் பிரான்ஸிஸ்கா மரியாம்பிள்ளை என்பவர் மகளின் உடையில் பிடித்திருந்த தீயை அணைத்துவிட்டு ஆபத்தான நிலையில் அவரை யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதித்தார். அன்றிலிருந்து தொடர்ந்து சிகிச்சைபெற்று வந்த சிறுமி நேற்று அதிகாலை மரணமானார்;

மரண விசாரணை அதிகாரி கே. கேசவன் மரணவிசாரணை நடத்தி விபத்து மரணமெனத் தீர்ப்பு வழங்கினர். (மா)

## வவனியாவில் சிங்கள பாடசாலை மீண்டும் ஆரம்பம்

வவனியா, ஞாயிறு.
மூடப்பட்டிருந்த சிங்கள மகா வித்தியாலயம் மீண்டும் இயங்கவுள்ளது.

பாதுகாப்பின்மை காரணமாக வவனியா சிங்கள மகா வித்தியாலய தில நீண்டகாலமாக வகுப்புக்கள் நடைபெறாமல் இருந்து வந்தது.

ஆயுதப்படை அதிகாரிகள் எடுத்தள்ள பாதுகாப்பு நடவடிக்கைகளைத் தொடர்ந்து அடுத்த சில தினங்களுக்குள் மீண்டும் சிங்கள மாணவர் கல்வி பயில வசதி செய்யப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது (கூ-மா)

## மரண அறிவித்தல்

### பெனடிக்ற் அந்தோனிப்பிள்ளை
(இளைப்பாறிய பொலிஸ் உத்தியோகஸ்தர்)



இளைப்பாறிய பொலிஸ் உத்தியோகஸ்தர் பெனடிக்ற் அந்தோனிப்பிள்ளை காலமானார். அன்னார் செல்லப்பாக்கியத்தின் (சின்னமணி) அன்புக் கணவரும், பிரிதிவிராஜன் (ராஜா) நோர்வே, சசிந்ரா நோர்வே, அனுரேகா நோர்வே என்பவர்களின் அன்புத்தந்தையாரும் காலஞ்சென்ற வி சி பரமானந்தத்தின் சகலனும் ஆவார் அன்னாரின் பூதவுடல் 22/3, பிளெச்சர்ஸ் லேன், சுண்டிக்குளியிலுள்ள அவரது இல்லத்திலிருந்து 18-01-87 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3-30 மணிக்கு கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும் இவ்வறிவித்தலைச் சகலரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்ளுகின்றோம்.

தகவல்! எஸ். அருள்ராஜ்.
விசேட உத்தியோஸ்தர் (S S O),
எ. செல்லப்பாக்கியம் (சின்னமணி)

(C 7(33)

### சிவசம்பு சரவணமுத்து (தங்கு)
(யாழ் மாநகர சபை இளைப்பாறிய இறைவரி பரிசோதகர்)

சங்கானையைப் பிறப்பிடமாகவும், மூளாய் வாசியுமான சிவசம்பு சரவணமுத்து காலம கிவிட்டார். இவர் யோகாம்பிகையின் அன்புக் கணவரும், பவானி (பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி), சிவரூபன் (பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், திருமதி விசாலாட்சி இளையதம்பியின் அருமை மருமகனும், திருமதி அன்னபூரணம் கனகசபை காலஞ்சென்ற கி சிவப்பிரகாசம் காலஞ்சென்ற சி. இராமநாதன், திரு. சி. சண்முகராசா (சங்கானை அரசினர் வைத்தியசாலை) ஆகியோரது சகோதரனும், திரு இ. பாலசிங்கம் சங்கானை உதவி அரசாங்க அதிபர் பணிமனை), திரு பொ. கனகசபை ஆகியோரின் மைத்துனரும் ஆவார், அன்னாரின் பூதவுடல் (18-1-87) இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து தகனக்கிரியைக்காக மூளாய் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்! திரு இ. பாலசிங்கம்,
திரு. கி. சண்முகராசா

C-7026

## ஐக்கிய இலங்கைக்கு தீங்கில்லாமல் இனப்பிரச்னைக்கு தீர்வுகாணப்படவேண்டும்
### தொண்டமான்

(சென்னை)
"இலங்கையின் இனப் பிரச்னைக்குத் தீர்வு காணும்போது ஐக்கிய இலங்கைக்குக தீங்கு ஏற்படாதவகையிலேயே தீர்வு காணப்படவேண்டும்" என்று கிராமிய தொழிற்றுறை அமைச்சர் எஸ் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

நேற்று இலங்கை திரும்பும் வழியில் திருச்சியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் இந்திய அரசு ஏற்கனவே இக்கருத்தை ஒத்துக்கொண்டிருப்பதைச் சுட்டிக்காட்டினார்.

இனப்பிரச்னைக்கு அமைதித் தீர்வு காண்பதற்கான சூழ்நிலை தற்போது நிலவுவதாகவும், இப்பிரச்னைக்குத் தீர்வு காண்பதில் ஆர்வமுள்ள ஒவ்வொருவரும் இதற்கு ஒத்துழைப்புத் தரவேண்டும் என்றும் கூறிய திரு தொண்டமான் யாழ்ப்பாணத்து தடைகள் இன்னும் நீடிக்குமேயானால் நிலைமை மிகவும் மோசமாகிவிடும் என்றும் எச்சரித்தார். (ஓ)

## இமையாணன், நவிண்டிலில் கசிப்பு உற்பத்தி விற்பனை முறியடிப்பு

வல்வெட்டித்துறை, சனி
இமையாணன் நவிண்டில் ஆகிய பகுதிகளில் கசிப்பு விற்கப்படுவதாக புலிகளுக்குக் கிடைத்த தகவலையடுத்து தொடர்ந்து தில்லையம்பலப் பிள்ளையார்.கோயில் காட்டுப் பகுதியில் பற்றைகளையும் குளங்களையும் கடந்து சென்று பறறைக் காட்டினுள் நாற்பதைந்து கலன் கசிப்பு, வடிக்கப்படாத கசிப்புக் கலவை, அவற்றை வடிக்கப் பயன்படுத்திய உபகரணங்கள் ஆகியவற்றைத் ஆகியவற்றைத் தமிழீழ விடுதலைப் புலிகள் கண்டுபிடித்துள்ளனர்.

இது சம்பந்தமாக அன்னுகிலையடியைச் சேர்ந்த சிவப்பிரகாசம், சிவலிங்கம் ஆகியோரும் கைதுசெய்யப்பட்டனர். இதற்குப் பொறுப்பான சிவலிங்கம் என்பவருக்கு மூவாயிரம் ரூபாவும் அவருக்கு ஒத்தாசையாகவிருந்த சிவப்பிரகாசம் என்பவருக்கு 1000 ரூபாவும் அபராதமாக விதிக்கப்பட்டது.

இருபத்தைந்து கலன் கசிப்பு விற்றுவரென ஐயாத்துரை என்பவரும் புலிகளினால் கைது செய்யப்பட்டார். இவரினால் பல இடங்களில் விற்றதாகக் கூறப்பட்ட கசிப்பை புலிகள் கைப்பற்றியதுடன் இவருக்கு ரூபா ஐயாயிரம் அபராதமாக விதிக்கப்பட்டது.

## மருத்துவ சிசிச்சை முகாம்

சாவகச்சேரி, சனி
கைதடி, இராஜபுரக் கிராமத்தில் இருக்கும் 50க்கு மேற்பட்ட வறிய குடும்பங்களுக்கான மருத்துவ சிகிச்சை முகாம் ஒன்றினை அறவழிப் போராட்டக் குழுவின் மருத்துவ, முதலுதவிக்குழு கடந்த வாரம் நடாத்தியது.

இங்கு வசிக்கும் மக்களுக்கு டி.பி. சிங்கராசா பரிசோதனை செய்தார். (ஓ)

இப்பத்திரிகை "ஈழநாடு லிமிட்டெட்" ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1987-ம் ஆண்டு தை மாதம் 18-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/1003/81 Eelanadu P. O. Box 49 Telerame 'Eelanadu' Telephone, 22389—24126